4060

செந்தமிழ்

தொகுதி—76 மார்ச்சு 1982 பகுதி—1

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

தமிழ் இலக்கிய இதழ்

ஆசிரியர்: டி. பி. எம். பெரியசுவாமி

செந்தமிழ்

தொகுதி—76 மார்ச்சு 1982 பகுதி—1

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	புதிய குறள் — மான்முருகனார்	... 1
2.	இலக்கியத்தில் இமயமலை —கு. சதாசிவன் M.A.M.,Phil.,	... 5
3.	இராமாயணக் கும்மி — ச. சுபாஷ் சந்திரபோஸ் M.A.,	... 14
4.	உரிச்சொல் எது? எது? — டாக்டர் தி.ப.சாமி எம்.ஏ.பி.டி.,	... 21
5.	இலக்கியத் திறனாய்வு — டாக்டர் வை. சச்சிதானந்தன், M.A. Ph.D.,	... 28
6	சிலப்பதிகாரத்தில் இறுக்கம் — திருமதி பூங்கோதை M.A.	... 34
7.	குழந்தைகளின் நோய் தடுப்பு முறைகள் — டாக்டர் எஸ்.எம். ஜெயதிலகம் M.B.B.S.,	... 43
8.	பைந்தமிழ் வளர்த்த தேவர் கலைமாமணி க. அ. ஆறுமுகனார்	... 49
9.	காஞ்சி காமகோடி சுவாமிகளுக்கு தமிழ்ச் சங்கத்தில் வரவேற்பு	... 51

புதிய குறள்

கவிராச பண்டித் இராமசுப்பிரமணிய நாவலர்
[மான்முருகனார்]

பாயிரம்

கடவுளுண்மை

உலகவடி வாகி யொளிரு மிறைவன்
அலகிலிய லாய்வ தறிவு. 1

அறம்

அறத்திற் பெரிதொன் றறியே மறையும்
அறத்தின் வழிநிற்கு மால். 2

ஒழுக்கம்

ஒழுக்கமுள ராயி னொருவர்க் குலகில்
இழுக்க மனைத்து மிறும். 3

அறத்துப் பால்

இல்லறம்

இல்லற மொன்றே யியற்கை யறமாகும்
நல்லற மென்ப நயந்து. 4

வாழ்க்கைத் துணை

வாய்மை வழுக்காது மாண்ட கடனறிந்த
தூய்மையாள் வாழ்க்கைத் துணை. 5

பெண்ணலம்

எண்ணல மெல்லா மிருந்தும் பயனில்லை
பெண்ணல மில்லாப் பிறப்பு. 6

கற்பு

அயனெஞ்ச முள்ளா அடலாண்மை யென்ப
கயலஞ்சு கண்ணார்தம் கற்பு. 7

அன்பு

என்பிலா யாக்கை யெனல் வேண்டு மாருயிர்
அன்பிலா தாயி னறி. 8

சுற்றந்தழால்

சுற்றந் தழுவித் துணைவேண்டி வாழ்பவர்க்
கற்ற முறுவ தரிது. 9

கூட்டுறவு

நாட்டுறவு நன்கு நடவாமை யாவர்க்குங்
கூட்டுறவு குன்றுங் குறிப்பு. 10

ஒற்றுமை

ஒற்றுமைப் பட்டிவ் வுலகிடை வாழ்பவர்
எற்று மிடர்ப்படுவ தில். 11

இன்சொல்

விட்டுரைக்கு மொன்னார் மிடலழிய முற்பிணிக்குங்
கட்டுரைக்கு மின்சொற் கயிறு. 12

விருந்தோம்பல்

இருந்துண்டு வாழ்வரி னென்பயனாங் காடே
விருந்துண் டுலவா மனை. 13

உதவி

செறிந்த மரம்போல்வர் தீய பிறர் மாட்
டறிந்து முதவா தவர். 14

வாய்மை

திறத்திற் றிரியாது சீர் சிறந்த வாய்மை
அறத்திற் கியன்ற வடி. 15

நடுவு நிலைமை

இறைகோடலில்லா வியல்புடை யார்க்கு
நிறைகோலு மில்லை நிகர். 16

புறங் கூறாமை

அறங்கூறு மாக்க மனைத்து மழியும்
புறங்கூறும் புன்மை புகின். 17

கேள் கேளாமை

எள்ளாமை வேண்டு மியல்புடையா ரெஞ்ஞான்றுங்
கொள்ளாமை வேண்டுமழி கோன். 18

குற்ற மொழிதல்

குற்றம் பலவாயிற் கொள்ளா ருலகத்தார்
சுற்றமுஞ் சூழ்ந்து சுடும். 19

கடமை

கடமை கருதாது கட்டழிந்து வாழு(ம்)
மடமையி னில்லை மறம். 20

அழுக்காறு

வழுக்காத்து வாழும் வகையறியார் ஞாலத்
தழுக்கா றகலா தவர். 21

பெரியார்

அரியவர் யாவ ரகலிடத் தென்னிற்
பெரியவ ரென்ப பிறர். 22

தீவினையச்சம்

தீவினை யாவ தூஉஞ் செய்யற்க வெஞ்ஞான்றுந்
தீவினை தீயிற் றெறும். 23

புகழ்

இகழுடைய ரெல்லா மிலராவர் வாழ்வார்
புகழுடைய ரென்னும் புலம். 24

இடுக்கணழியாமை

நடுக்க மிலாதார் நகையின் மறையும்
இடுக்க ணெனும்பே ரிருள். 25

மக்கள்

தக்கவ ரல்லாது தாம்வாழவ ரேலுலகின்
மக்களி னின்றாகு மாண்பு. 26

நன்றியறிவு

நன்றி வழுவா நலத்திற் சிறக்குமுயர்
மன்றிற் சிறந்த மரபு. 27

பொறுமை

வறுமை யொருகாலும் வாராமை காண்டும்
பொறுமை யுடையார் புலத்து. 28

இலக்கியத்தில் இமயமலை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கு. சதாசிவன், M.A., M.Phil.,
மதுரைப் பல்கலைக் கழகம்

சமயம் சார்ந்த செய்திகள் :

இமயமலைக்கும் தமிழருக்கும் இடையே உள்ள அரசியல் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் இதுகாறும் கூறப்பட்டன. இனிச் சமயத் தொடர்பான செய்திகளைக் காண்போம். சமயம் சார்ந்த செய்திகள் பெரும்பாலும் காலத்தால் பிந்தியவை எனலாம். இவை பெரும்பாலும் பக்தி இயக்கத்தைத் தொடர்ந்து எழுந்தவையோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. சிலப்பதிகாரம் தவிர்த்த ஏனைச் சங்க இலக்கியங்களில், பிற்காலச் சமய இலக்கியங்களில் கூறப்படும் செய்திகள் காணக் கிடைக்கவில்லை.

மிகப் பழங்காலந்தொட்டே இறைவன் இம்மலையின்கண் உறைகிறான் என்று தமிழர் கருதி வந்தனர். மாணிக்க வாசகரின் திருவாசகத்தில் ஒரு வாசகம் இதற்குச் சான்று.

"… … … … … … …
கலைத்தலை யாய் கருணாகர
னே கயிலாய மென்னும்
மலைத்தலை வாமலை யாண்மண
வாளவென் வாழ் முதலே" என்பதாம்.
(நீத்தல் விண்ணப்பம் : 40)

இம்மலைக் கண்ணுள்ள கயிலையங்கிரியிற்றான் தம் உலக நாட்டிய அரங்கை அமைத்து, உயிர்களை இயக்கத் தம் ஆனந்தக் கூத்தை கயிலாயக் கூத்தன் ஆடினான் என்பதைத் திருமூலரின் திருமந்திரம் (19) உணர்த்தும்.

"ஆனந்தக் கூத்தன் சொற்போந்து வளப்பில்
கயிலை வழியில் வந்தேனே"

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணமும் இச் செய்தியைச் சிறப்பாக விளக்குகிறது. பெரியபுராண அடியாவது,

"அந்தியிளம் பிறைக்கண்ணி யண்ணலார் கயிலையினில்"
என்பது ஆகும்.

இம்மலையில் தேவரும், முனிவரும், அந்தணரும், தேவகன்னியரும் இருந்து மகிழ்ந்தனர். தேவலோகக் கன்னியர் அன்னக் குஞ்சுகளுடன் ஆடிப் பாடி மகிழ்ந்தனர். ''பொன்படு நெடுங் கோட் டிமயத்துச்சி வானர மகளிர்க்கு மேவல் ஆகும்'' என்ற நற்றிணைப் பாடல் (356 : 3-4) இதனை விளக்க வல்லது. வானர மகளிராகத்* தமிழர் கருதுவோரில் ஊர்வசியும் உண்டு. காதல் வேட்கைக் காரணத்தால் ஊர்வசி அகத்திய முனிவரால் சாபமுண்டாள், உலகத்தில் பிறந்து காதல் வேட்கை தீர்ந்து மேலுலகம் வருமாறு அவர் சாப விமோசனமும் தந்தார். அப்படி உலகத்து அவதரித்த ஊர்வசியின் வழி வந்தவளே சிலப்பதிகாரத்து மாதவி. முனிவரால் சாபமேற்ற சயந்தன் (இரந்தினின் மகன்) மலையமலையில் மூங்கில் கொடியாகப் பிறந்-தான். இச் செய்தியைக் கூறவந்த இளங்கோ அடிகள்,

''தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய'' (சிலம்பு : 3: 1-3)

என்ற அடிகளால் உணர்த்தினார். இம்மகளிரின் நாட்டியத்தைத் தேவர்களும், மற்றவர்களும் கண்டு இன்புற்றனர் என்க.

இவ்வுலகை வழிநடத்தும் இறைவன் உறைவது இமயமலை. அது புனிதமானது பக்திப் பெருக்கின் மேலீட்டால் காலப்போக்கில், மக்கள் இம்மலையின் பல இடங்களை இறைவனின் உறைவிடங்

---

* மற்ற வானர மகளிர் அரம்பை, மேனகா, திலோத்தமை என்போர் ஆவர். ஊர்வசி பற்றிய இச் செய்தி லக்ஷ்மி சுயம்வர என்ற வடநாட்டு நாடகத்தில் வருவதும் காண்க. இங்கு ஊர்வசி, புருரவஸ் என்ற மனிதனைக் காதலித்ததால், கோபமுற்ற பரதமுனி அவளைச் சபித்தார். அவள் நாட்டியக் கணிகையாக பூவுலகில் தோன்றி நாட்டியத்தைப் பரப்பினாள். ஏறக்குறைய இதுபோன்ற கதை இருக் வேதத்தில் கூறப்படுவதையும் காண்க. கந்தர்வர்களும் அப்சரஸ்களும் மேலுலகத்தில் இந்திரனை மகிழ வைத்த செய்தியையும் காண்க. இவர்களை அரம்பையர் என்று கூறும் வழக்கு நோக்குதற்குரியது. [சிலம்பு. 26: 128—'29]

களாகக் கருதத் தொடங்கினர். இவ்விடங்கள் புண்ணியத் தலங்களாகவும் பரிணமித்தன. 'பிறவிப் பெருங்கடலை'க் கடக்கும் நோக்குடன் மக்கள் அங்கெல்லாம் புனிதப் பயணம் மேற்கொள்வது வழக்கம். எடுத்துக்காட்டாக, குமரியம் பெருந்துறையில் வட நாட்டார் குறிப்பாக சாலி என்ற வழிதவறிய பெண் மூழ்கி எழுந்ததைக் கூறலாம். மணிமேகலை சுட்டும் இச்செய்தியை 'எரித்திரிய (செங்கடல்)க் கடல் செலவு' என்று வேற்று நாட்டு இலக்கியம் வழிமொழிகிறது. அதுபோன்று தமிழகத்தில் கிடைக்கும் பல கல்லெழுத்துக்களின் இறுதியில் கங்கையாற்றின் புனிதத் தன்மை சுட்டப்படுவதை அறிஞர் அறிவர். செய்த சில பாவங்கள் தொலையக் 'கங்கையாற்றில் நீராடுவராக என்று கூற்று இதனை விளக்கும்.

இன்று இம்மலையின் உச்சியும், அடிவாரமும் தெய்வத் தன்மை வாய்க்கப் பெற்றவை என்று மக்கள் கருதுவர். இந் நம்பிக்கை முற்காலத்தே இருந்து வந்துள்ளது என்பதற்கு அங்கு எழுந்துள்ள திருத்தலங்களே சான்று. கார்வாரில் உள்ள பத்ரிநாதம் ஒரு திருத்தலம்; இது ஏறக்குறைய 10,294 அடி உயரத்திலுள்ளது. இங்கு மகாவிஷ்ணுவின் அவதாரங்களில்[1] ஒன்றைக் குறிக்கும் உருவம் கொண்ட கோயில் உள்ளது. கேதார்நாதம் சிவத்தலம்; இது ஏறக்குறைய 11,794 அடி உயரத்தில் உள்ளது. கார்வாரிலுள்ள மற்றுமொரு சிவத்தலம கங்கோத்திரி ஆகும். இது ஏறக்குறைய 10,319 அடி உயரத்திலுள்ள புண்ணியத்தலம். ஈண்டு இந்து சமயத்தின் தத்துவச் சிந்தனை மணம் வீசும். இதனருகில் ஏறக்குறைய 13,800 அடி உயரத்தில் பகீரதி என்ற பேரோடை தோற்றமெடுக்கிறது.

---

1 வடக்கு வங்கத்துள்ள தாமோதரில் ஒருகல்லெழுத்து கிடைத்துள்ளது இது புத்தகுப்தரின் கி.பி. (477-95) ஆட்சிக் காலத்தைச் சார்ந்தது இக்கல்வெட்டு 'சுவேதவராக ஸ்வாமின்' கொகாமுக ஸ்வாமின். என்ற இரு கடவுளரைக் குறிக்கிறது (D. C. Sircar, Select Inscriptions, vol. I, pp 328 ff): இவை இரண்டும் வராக அவதாரத்தைக் குறிப்பனவாம். இக்கடவுளரின் கோயில்கள் இமாலயச் சிகரத்தில் இருந்ததாகவும், அவை ஒரு வேளை வராகச்சத்திர அல்லது வராகச் சேத்திரா என்ற அறியப்பட்டதாகவும், அவை நேபாளத்தில் கௌசிகீ கொகா என்ற ஆறுகள் சேருமிடத்தில் இருந்ததாகவும் அறிகிறோம். இச்செய்தி

இம்மலைக்கண் முனிவரும் முதியவரும், அறவோரும் அந்த ணரும், அறிவரும், அவுணரும், தேவரும், அசுரரும் உறைந்து, தவமேற்கொண்டனர். புறநானூற்றுப் பாடலொன்று இச்செய்தியை வலியுறுத்திக் கூறுகிறது அப்பாடலில் வரும் ஓரடியாவது,

"அந்தி அந்தண ரருங்கட னிறுக்கும்' என்பதுமாம்.
(புறா், 2: 23)

இச் செய்தியைச் சிலப்பதிகாரமும் நன்கு விளக்குகிறது. அது சுட்டும் செய்தியாவது :

"மலயத் தேகுதும் வான்பேரிமய
நிலயத் தேகுத னின் கருத்தாகலின்
அருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன காத்தனின் கடனென்" என்பதாம்.
(சிலப்பு. 26:100-103)

இத்திருத்தலத்தின் புண்ணியம் கருதியே சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல்லெடுக்க இமயம் சென்றான். பொதியில் மலையில் அகத்திய மாமுனி உறைவது அறிந்திருந்தும் அவன் இமய மலை நோக்கிச் சென்றனன். பொதியிலில உறுதியான கற்பாறைகள் இருந்தும் அதனை விடுத்து ஆற்றி அந்தணன் உறையுமிடத்திருந்து கல்லெடுக்கத் துணிந்தான் இவ்வீரச் செயலுக்கு அடிப்படைக் காரணம் யாதெனின் அம்மலையின் புண்ணியத் தன்மையேயாம் இதனையும் இளங்கோவடிகள் தீட்டிய சிலப்பதிகாரம் உணர்த்தும்.

மேற்கூறப்பட்ட கருத்தை அணி செய்வதறிக. [**Indian Historical Quarterly**, Vol. XX, pp. 56-60; D. C. Sirca, **Studies In The Religious Life of Ancient and Medieval India**, Motilal Banarsidass, Delhi, 1971, pp. 46-47]

Note a passage from the **Mahabharata**, retouched by a Saiva, that Nārāyana, son of Dharma, is stated to have practised austerities in the Himalayas (the exact place is sometimes specified as Badari), He is said to have become invincible by propitiating Siva. [Ibid., pp. 23-24]

"மாலை வெண்குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்க வாங்கவர்
ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கால் கொள்ளினுங் கடவுளாகும்"

(சிலப்பு 25: 115—19) என்றும்,

"வடதிசை மருங்கின் வானவன் பெயர்வது
கடவுளெழுத்தோர் கற்கே யாயின்
ஓங்கிய விமயத்துக் கற்கால் கொண்டு"

(சிலம்பு. 26:150—52 என்றும்.

குறிக்கப்பட்டுள்ளது காண்க. இமயத்தில் எடுத்த கல்லை, புண்ணியம் நிறையப் பெற்ற குமரியம் பெருந்துறையும் காவிரி நதியும் இருந்த போதிலும், அவற்றில் நீராட்டாது, கங்கைப் பேரியாற்றில் நீராட்டினான் இச்செய்தியையும் சிலப்பதிகாரமே சிறப்பித்துக் கூறுகிறது.

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன லாடித்தம்
எங்கோ மகளை யாட்டிய வந்நாள்" (மேற்படி, 25: 160-61)

என்றும்,

"வீங்குநீர்க் கங்கை நீர்ப்படை செய்தாங்" (மேற்படி, 26:153)

என்றும் கூறுவது காண்க. கங்கையாற்றின் சிறப்பினைச் சேக்கிழார் தம் பெரியபுராணத்து,

'துன்னுசடைச் சங்கரனா ரேற்றுதூ நீர்க்கங்கை
அன்னமலி யகன்றுறைநீ ரருங்கரையின் மருங்கிணைந்தார்"

என்று கூறுகிறார்.

(பெரியபுராணம், திருமூல தேவநாயனார், 3566)

தம் போர்த் திறனைப் பகைவருக்குக் காட்டுதற் பொருட்டும் இமயமும் கங்கையும் புண்ணியம் நிறையப் பெற்றவை என்பதறிந்த தன் பொருட்டும் சேரன் வடநாடு புக்கு, கல்லெடுத்து, கங்கையில் நீராட்டிப் பிரிந்தான் என்றும் கொள்ளலாம். மறத்தொழில் புரிவோர்க்கதுவே அழகாம்

மேலும் இமயமலைக்கண் உறையும் இறைவர் தேவ முதல்வன் (நற்றிணை,வாழ்த்து,") என்பது தமிழர் அறிந்ததே இச்செய்தியைச் சங்கப்பாடல் ஒன்று எடுத்தியம்புகிறது, 'வடபால் முனிவன்' என்ற புறநானூற்று அடியாகும் அது (201.8) கங்கைப் பேராறு வடபால் இறைவனின் தலையிலிருந்து பிறப்பது என்ற செய்தியும் நோக்கற்பாலது. ''தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்' (26: 64) என்ற சிலப்பதிகார அடி இச் செய்தியை வலியுறுத்துகிறது.

மேலே குறிக்கப்பட்டுள்ள திருத்தலங்கள் ஏதும் சங்க இலக்கியங்களில் எங்கும் குறிக்கப்படவில்லை. ஆகவே இத்தலங்கள் சங்க காலத்தில் இருக்கவில்லையோ என்றும், பிற்காலத்து எழுந்தவையோ என்றும் ஐயுறவேண்டியுள்ளது. முற்காலத்து ஏற்பட்டவையாயினும் வெளியுலகறியாது இருந்தனவோ என்றும் ஐயுற இடமுள்ளது இவற்றைப்பற்றிச் சங்கப் புலவர்கள் சுட்டாதது அவர்களுடைய குறையென்று கூறுதற்கில்லை. பிற்காலச் சமய இலக்கியங்களில் இத்திருத்தலங்களைப்பற்றிய விளக்கங்கள் அதிகம் இருப்பதனால், இத்திருத்தலங்கள் பிற்காலத்து எழுந்தவை என்று கூறமுடிகிறது.

இனி, நாம் சமய இலக்கியங்கள் தரும் கருத்துக்களைக் காண்போம். சமய நூல்களில் திருக்கேதாரம் பசுபதி நேபாளம், வதரியாச்சிரமம், திருப்பிரதி, சாளக்கிராமம், நைமிசாரணியம் போன்ற திருத்தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன, திருக்கேதாரத்தின் இயற்கை அழகினை வருணிக்கப் போந்த திருஞானசம்பந்தர்.

''தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பால் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டு பாட மயிலால பான் கன்று துள்ளி வரக்
கெண்டை பாயச் சுனை நீல மொட்டலருங் கேதாரமே''

(தேவாரம், 250 பதிகம் 1-ஆம் பாட்டு) என்று புகழ்ந்துரைத்தார். மேலும் ''மணிசிந்தும் கேதாரம்'' (மேற்படி, 5-ஆம் பாட்டு) என்றும் 'வேங்கை மரம் வள நம் கேதாரம்'' (மேற்படி 7-ஆம் பாட்டு) என்றும் கூறுவாராயினார்.

மாமுனிவர்கள் பணிந்தேத்தும் திருத்தலங்களில் முதன்மை யானது ''கேதாரம்'' என்பது சேக்கிழாரின் கூற்றால் பெறப்படும்.

பசுபதியின் நேபாளத்துக்குப்போகுமுன் மாமுனிவர்கள் திருக்கேதாரத்துக்குப் போவர் என்று கூறப்படுகிறது சேக்கிழாரின் அச் செய்தி,

"மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ்ப் பசுபதி நேபாளத்தைப் பணிந்தேத்திப்'' (3566)

என்ற பெரியபுராண அடிகளால் விளக்கப்படுகிறது,

சம்பந்தர் திருக்கேதாரத்தில் வேங்கை மரம் வளரும் என்கிறார். வேங்கை மரம், திருப்பிரிதியில் வளர்ந்து, விலங்குகளுக்கு நிழல் தந்தன என்று திருமங்கையாழ்வாரும் கூறுகிறார். இயற்கையமைப்பு, கால நிலைகள் இம்மரவளர்ச்சிக்கு உதவுவனவா என்பது ஆராயத்தக்கது. இங்கு யானைகளும், சிங்கங்களும் இருப்பதாகவும் (250-9) அறிவிக்கிறார். குளிர்ச்சியான இடங்களில் காட்டு விலங்குகள் அதிகம் வாழ்கின்றன. ஆகவே இக்கூற்று மெய்யாக இருக்கலாம்.

மிகச்சிறந்த பன்னிரு சைவத்திருத்தலங்களில் திருக்கேதாரமும் ஒன்று. இப்பன்னிரு திருத்தலங்களிலும் பன்னிரு சிவலிங்கங்கள் கருவறைகளில் எழுதப்பட்டுள்ளன.[1] ஆகவே சிவ வழிபாடு செய்வோர் லிங்கங்களைக் கண்டு தொழ இங்கு வருவது இயற்கை.

இமயமலையில் அடுத்த சைவத்திருத்தலமாய் விளங்குவது பசுபதி நேபாளம்' ஆகும். எனவேதான்சேக்கிழார் அதனை திருக்கேதாரத்துக்கு அடுத்து வைத்தார் என்க. ஆனால் இத்திருத்தலம் காலத்தால் மிக முந்தியது என்று தோன்றுகிறது. இப்பசுபதி நேபாளம் அப்பெயர் கொண்ட நாட்டின் தலைநகராகிய காட்மண்டிலிருந்து ஏறக்குறைய இருகல் வடக்கில் உள்ளது. அங்கு வாழ்ந்த பாசுபதர்கள் பசுபதிநாதர் ஆலயத்தில் தொழுகை செய்தனர். அசோகரின் காலத்தில் பாசுபதர்கள் அங்குத் தங்களுடைய மடங்களை எழுப்பியிருந்ததாக அறிகிறோம். ஏறக்குறைய கி. மு. 249 - இல் அசோகர் தம்மகள் சாருமதியுடன் அங்குச் சென்றதாகவும், சாருமதி அம்மடத்துத் துறவியானதாயும் அறியப் படுகிறது.[2] அசோகருக்கடுத்து காஷ்மீரத்தில்

---

1 G.K. Subramanya Mudaliyar (ed), Periyapuranam, Part VI, Appendix II, p.9

2 **Monograph on the Religious Sects in India** by Dr. M. Rajamanickam, referred to in the Ibid., p, 9

அரசாண்ட வாரிசு ஜலௌகா (Jalauka) ஆவார். இவர் காஷ்மீர சைவ சமயத்தார் என்று இராஜ தரங்கிணி[3] கூறுகிறது. சிவனுடைய உருவங்களை, பணம் சேர்க்க வேண்டி மௌரியர் விற்றதாகவும் அறியப் படுகிறது இச் செய்தி வட நாட்டில் சைவ சமயம் அடைந்திருந்த பேரிடத்தைக் குறிக்கும் கி. மு. இரண்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த பதஞ்சலி தம் 'மகாபாஷ்யம்' என்ற நூலில் சிவ பாகவதர்களைக் கூறுகிறார்.[4]

இப்பாசுபதர்கள் தமிழகத்திலும் நிறைந்திருந்ததாக அறிகிறோம். இதனை மகேந்திரவர்மன் வரைந்த 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற நூல் கொண்டு அறியலாம். ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகேந்திர வர்மன் சிவ பாசுபதர்களைக் குறை கூறி, நகையாடுமளவு அவர்கள் நாட்டில் இருந்தார்கள் என்றால், அம்மன்னனுக்கு முன்னரே அச்சைவப் பிரிவினர் தமிழகத்தில் சிறப்புடன் வாழ்ந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மேலும் கரூரில் பாசுபதர் ஆலயம் இருந்ததாயும் கல்வெட்டு கொண்டு அறிகிறோம். சோழர்காலத்தில் அள்ளூர்ப் பசுபதீசுவரர் கோயில் சிறந்து விளங்கியதாக கோப்பர கேசரிபன் மரது 4 - ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து கூறுகிறது.

இவர்கள் சிந்துவெளி மக்களின் வழியினர் என்று கூறத் தோன்றுகிறது. சிந்துவெளியில் கிடைத்த பாசுபதி உருவம் பொறிக்கப்பட்ட முத்திரையும், இதர லிங்கங்களும் இம்முடிவைத் தருகின்றன. சிந்துவெளியில் வாழ்ந்த பாசுபதர்கள் பிற்காலங்களில் காஷ்மீரம், நேபாளம் ஆகிய இடங்களுக்குக் குடி பெயர்ந்திருக்க வேண்டும். அப்பண்டைய மக்களின் வழியினர் பாசுபத சமயப் பிரிவினை ஆதரித்து அதனை நாடெங்கிலும் பரவச் செய்திருக்க வேண்டும். அதுபோன்று சிந்துவெளி பாசுபதர்களில் சிலரேனும் தென்னக புகுந்திருக்க வேண்டும். தென்னகம் புகுந்த பாசுபதர்கள் காலங்கள் பல கடந்து, ஏற்றகாலம் கிடைத்ததும், பாசுபதலிங்க வழிபாட்டினைத் தமிழகத்திலும் நிலைநாட்டியிருக்க வேண்டும். கிறிஸ்தவ யுகத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் வட இந்தியப் பாசுபதரும் தென்னிந்தியப் பாசுபதரும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றிருப்பர். இந்த நெருக்

---

3 Rajatarankini (Kalhana), I, 108 ff

4 R.D. Manjumdar, the Age of Imperial Unity, 4th ed., Bharatiya Vidya Bhavan, Bombay 1968, pp. 453—56

கத்தின் விளைவாகப் பல வடநாட்டுப் பாசுபதர் தென்னகத்துக்கு வந்து, மீண்டும் பாசுபத சைவப் பிரிவினைத் தமிழகமெங்கும் வளரச் செய்திருப்பர். எனவேதான் நாம் கரூரில் பாசுபதேசுரர் ஆலயத்தையும், மகேந்திரவர்மன் காலத்தில் பாசுபத பக்தர்களையும் அதிகம் காணமுடிகிறது.

கிறிஸ்தவ யுகம் தொடங்கிய பின் தமிழகம் புகுந்த பாசுபதர்கள் பெரும்பாலும் லகுலீசருக்குப் பின் வந்தோராகலாம் என்றும் தமிழகத்தில் பாசுபத சமயப் பிரிவு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் முதன் முதலில் காஞ்சியிற்றான் வந்தது என்றும், இது ஒருவேளை சமுத்திர குப்தரின் காஞ்சிப் படையெடுப்பின் விளைவாக இருக்கலாம் என்றும் கே.வி. சௌந்தரராஜன் என்ற தொல்பொருள் அறிஞர் கூறுகிறார்.[1] இக்கருத்துக்கு அணிசெய்ய அவர் மத்தியப் பிரதேசத்தில் உள்ள பத்மாவதியை கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் ஆண்ட பரசிவநாகர்கள் பாசுபத சமயத்தார் என்று வாகாடகக் கல்வெட்டுக்களில் புகழ்ந்துரைக்கப் பட்டிருப்பதைக் கூறுகிறார்.

---

1 K.V. Soundara Rajan, **Art of South India, Tamil Nadu And Kerala**, Sundeep Prakashan, Delhi, 1978, pp. 38-39

(தொடரும்)

இராமாயணக் கும்மி

பதிப்பாளர் : ச. சுபாஷ் சந்திரபோஸ்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தசரதன் பெருமை

சொல்லுவன் கேளும் புவி யரசே
செய சூரிய வங்கிழ வீரியவான்
வெல்லும் புயமுள்ள சம்பரனே மிக
வெத்தி கொண் டோங்கிய சக்ரபதி
கோசலை நாடுய ராசபதி வெகு
கோலமுடைய தோர் சக்ரபதி
பூசித ஞன தசரதனும் வன்
பூவுல கெங்குமே யாண்டிருந்தான். 1

ராச சியராச திரையளிக்க தேவ
நாடுக ளெங்குஞ் செழித் திருக்க
மாட்சியு மாகவே கோசலையா மெனும்
அய்யோத்தி நாடர சாண் டிருந்தான்.
நீதியு டனங்கே பாம்பு யெலியொடு
நேய பருந்தும் நெருங்கி யொன்ருய்
பேதக மன்றியே கூட்டினிலே யொன்ருய்
பேசவே தானர சாண் டிருந்தான். 2

வேங்கையு மானது தன்னுடனே பசு
மேய்ந்துமே வந்து மிரண்டுமே தான்
பாங்கொடு கூடியே நீர்குடிக்க மிக
வோங்கியே தானர சாண் டிருந்தான்.
ஓமங்கள் வேள்விக ளாகமங்கள் மறை
யுற்ற பெரியோ ருருக்கமொடு
நேமங்கள் தப்பித மன்றியிலே மிக
நித்தம் நிறைந் தர சாண்டிருந்தான். 3

தேவ சிவாலய பூசைகளும் பர
    தேசியர்க் கற்புத செய்கைகளும்
பாவமிலா தொரு காரியமு மிக
    பார்த்துமே பாருலகாண் டிருந்தான்.
பாளை விரிந்த கமுகுமே தானுயர்
    பந்தலை முட்டியே பாய்ந்து கொண்டு
வாளை இறங்கிய கோசலையா மெனும்
    வையகந் தானர சாண் டிருந்தான். 4

கண்ணுக் கிறங்கிய மேதினி யினமது
    கால்ப் படிந்தோடிய பால்களினால்
விண்ணுக்கு மோங்கிய சென்னெல்லுந்தான் பயிர்
    மிஞ்சி விளைந்தர சாண் டிருந்தான்.
தேனொடு வாழையும் மாங்கனியும் பலா
    தேங்கிள நீரும் சொரிந் தொழுக
மீனொடு நண்டு களித்துமே தான்சென்னெல்
    மிஞ்சி[1] விளைந்தர சாண்டிருந்தான். 5

பள்ளியறையுட நித்திரையு மங்கே
    பாவையர் விட்டங்கே தானெழும்பப்
புள்ளினமும் கிளி [யும்] பேசவைத்தே பகல்ப்
    போதிடுங் கோசலையர சாண்டிருந்தான்.
ராச பதங்களும் வீணையொடு செரு
    நாரியர் மிக்க தாலாட்டுகளும்
மாக மடங்கலும் வேள்வி யிடுமந்த
    வாழ்பதி கோசலை யாண்டிருந்தான். 6

மன்மத போக மனைவி யல்லால்மறு
    மற்றவர் பெற்ற மக்க ளென்ன
தன்ம வழியொடு தன்னுடனே மிகத்
    தானுமே கோசலை யாண்டிருந்தான்.

---

1 மிகுந்து

உக்கிர மாகிய துஷ்டர்களைப்
பெரியோர்களைத் தூஷணித்திட்ட வரை
சக்கிர மிக்க வருத்திடவேயவன் ருனுமே
கோசலை யாண் டிருந்தான். 7

ஆறினி லொன்று கடமைகொள்ளப் பூமி
யானது முப்போகமாய் விளைய
கூறுமொழி தவருமலே தானவன்
கோசலை யாண்டுமே கொண்டிருந்தான்
தந்திடும் பேர்க ளில்லாமலுமே யொன்றைத்
தாவென்று கேழ்க்க வில்லாமலுமே
செந்திரு பாக்கிய மெல்லவர்க்கு மங்கே
சேரவுந் தானர சாண்டிருந்தான். 8

ராசன் றசரத னிப்படியே யவன்
நாடாண் டிருபத ஞாயிரந்தான்
தேச குலபதி சக்ரவர்த்தி யவன்
செங்கோல் பிடித் தர சாண்டிருந்தான்.
உத்தொரு நாளவன் காலமேதான் மிக
சுத்தியுஞ் செய்துமே பத்தியொடு
சித்த முணர்ந்து பிறவிதனைக் கண்டு
தெண்டனிட்[2] டங்கே தசரதனும் 9

தன்மங்க ளானதும் பண்ணியிட்டே மனந்
தன்னில் இரக்கந் தயவுமிட்டே
பொன்மண மேடையில் வந்திருந்தா னப்போ
பூசுர ரெல்லோரும் போயிருந்தார்.
புத்தியு மேதையும் நீதிகளு மிகப்
போதனை யான சுமந்திரரும்
மித்துரு வாகிய பேருகளு மிக
வேற்றுமை யில்லாதே வீற்றிருந்தார். 10

---

[2]. வணங்கி

வதிஷ்டர் வருகை

வந்தாரே தானும் வதிஷ்டகுரு மிக
மன்னர் சமூகத்தில் வாறபோது
பந்தான தங்கே யெழும்பிடும் போல்மிகப்
பார்த்து மெழுந்தானே பார்த்திபனும்
ஆசனம் பொற்ப காதியிட்டே குரு
வானவர் தன்னையதிலே வைத்து
தாசான தாசன் நானுமென்றே யப்போ
தானுமே வீழ்ந்து சரணமிட்டான். 11

தசரதனின் வருத்தம்

அச்சதை யானதுந் தானளித்தா ரதை[ப்]
பட்சமுமாகவே மேலு மிட்டான்
தற்செயலான பராமுனியை யவன்
தானுமே பார்த்தவனென்ன சொல்வான்.
நானு மறுபத னுயிரமே[3] தொகை
நாளுமே யாண்டே னிராச்சியத்தை
தானுமே பிள்ளை யில்லையுமே யிது
தானென்ன பாவமும் சாமி யென்றான். 12

ராச நெறிகளுந் தப்பிதமோ மிக
நல்லோர் கெதிகளு மில்லையோ தான்
பூசை மறந்தேனோ தாய்தனையு மனம்
புண்படச் சொன்னேனோ போதவுந்தான்
பிச்சை யிடாத பெரும்பிழையோ மதம்
பேசியே கொண்ட பிசகுமோ தான்
வச்ச பொருளை யபகரித்தே யிடும்
வல்லபமாகிய வஞ்சமோ தான் ! 13

சென்ம வினைகளோ தீவினையோ குரு
தோஷமோ வேறையும் செய்ததுவோ
கன்ம வினைகளோ தானெனக்கே யிந்த[க்]
காரணமேது கருது மென்றார்

---

3. 9வது பாடலில் இருபதனாயிரம் என உள்ளது.

தேவரீர் பட்சமும் பூரணமாய்த் தவம்
செய்வோர்[க்] கிடாட்சஞ் சிறந்திருக்க
பாவங்களேது மெனக்கு மென்றே யிப்போ
பால ரில்லாதென்ன பாருமென்றார். 14

வதிஷ்டரின் தவம்

மன்னனு மிவ்விதம் கேழ்க்கவுமே
குருவான வதிஷ்டரு-மானவரும்
என்ன விதமோ உமக்குமே தானுளையே
வந்து சொல்கிறே மென்றெழுந்தார்
சென்றுமே வாழ்க்கையில்த்தான் வதிஷ்ட ரிந்தச்
சேதியுந் தானுமே சிந்தையிலே
கொண்டுமே வைத்தங்கே மாதவரு மப்போ
கோலத் தியானங்கள் கொண்டிருந்தார். 15

தேவர்கள் இராவணன் கொடுமை உரைத்தல்

இப்படித் தானிங் கிருக்கையிலே தேவர்
எல்லோரு மிந்திர னென்பவரும்
துப்போத மாகிய ராவணனால் மிகத்
துன்பமு மாகவே சோபமுற்றார்.
வேதமு மிக்க தபோதனரும் பெரு
வேள்வியுந் தானதை விட்டொழிந்தார்.
நீதியழிந்து வரம்பழிந்து மிக
நேம மழிந்து நினைவழிந்தார். 16

ஆகையினாலுமே தேவர்களும் வரப்
போதெழுந்து மயனிடத்தில்
வேகமதாகவும் போய் விழவு மன
வேதனை என்ன விளம்பு மென்றார்.
லெங்கை யரக்கன் பதியினா லினி
யெங்கே யொளிப்ப மிறையவனே
அங்கே யிருக்க முறையு மில்லை
யெங்க ளாபத்தைத் தீர்த்தெமை யாளுமென்றார். 17

வதிஷ்டர் பதில் கூறல்

நம்மாலே யாகுமோ தேவர்களே யந்த
ராவணன் தம்மை யகற்றுதற்கு
செம்மையு மாகவே வாங்களிங்கே யிப்போ
செப்புவ மென்றுமே சென்றெழுந்தார்.

தேவர்கள் முதலானோர் சிவனிடம செல்லல்

வெள்ளி மலைக் கயிலாசத்திலே சிவன்
வீற்றி மிருக்கு மேலானத்திலே
தெள்ளிய தேவர்க ளெல்லவரும் பிரம
தேவரும் போயங்கே தெண்டனிட்டார். 18

சிவன் வினவல்

ஏதிங்கே நீங்களும் வந்ததுமே யுமக்
கென்ன விடுகக ணிருப்பதையும்
ஓதுங்க ளென்றே பரமனுமே சொல்ல
ஓதுவர் தானுமே உம்பரெலலாம்

தேவர்கள் கூறல்

அய்யனே தெய்வமொன் ருனவனே
யரனுரே தவத்தோருள்க் கடலே
வையகந் தன்னி லரக்கருட மிக
வாதையைத் தீர்த்ததமை வையுமென்ருர். 19

சிவனின் பதில்

நாமு மளித்த வரமுமது மிக
நம்மா லழியா னிராவணனும்
தாமுமே யெல்லோரும் வாங்களென்றே யவர்
தாமு மெழுந்தாரே தற்பரனும்

திருமால் குறை கேட்டல்

பாலுக் கடலிலே பாம்பணையில் மிகப்
பள்ளி கொண்டங்கே படுத்திருக்கும்
மாலுக் கபய மென்றெல்லவரு மிக
மண்டி முறையிட்டார் வானவரும் 20

கண்கள் திறந்துமே தேவர் பிரானப்போ
கண்டுமே வானோரைக் கையமர்த்தி
உங்கள் மனக்குறை தானுமென்ன அதை
ஏதுமே என்று ருலகளந்தான்

தேவர்கள் குறை கூறல்

ராட்சத ராவணன் வாதையினால் மிக
நாங்கள் மடிவோமோ நாயகனே
போச்சுது மான முந்தானுமே தானெங்கே
போகுவோம் நாங்கள் புகலு மென்றார்— தொடரும்)

இலக்கிய நயம்

1958 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இலக்கிய விவாதம் ஒன்று நடைபெற்றது. காலஞ் சென்ற முதுபெரும்புலவர் அருணாசலம் பிள்ளை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். மாதவியைப் பாராட்டிப் பேசிய திரு. மு. அண்ணாமலை அங்கு தமிழ் விரிவுரையாளர். பழமையிலும் பாரம்பரியத்திலும் ஆழ்ந்த பற்றும் ஆர்வமும் கொண்டவர் அருணாசலம் பிள்ளை கணிகையர் மகளான மாதவி பெரிதும் பாராட்டப்படுவதை: அவரால் பொறுத்துக் கொள்ளமுடிய வில்லை. திரு. பிள்ளையவர்கள் தமது முடிவுரையில் கூறினார் "மாதவியின் நுழைவே காப்பியத்தில் சரியில்லை; 'மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென' என்று கூறி மாதவிக்குரிய மணவாளன் கடைத்தெருவில் தேர்ந்தெடுக்கப்படுகிறான். எப்படிப்பட்ட கடைத்தெரு? நகர நம்பியர் திரிதிரு மறுகு— நகரத்து இளைஞர்கள் என்பதோடு நகரத்தார் நம்பியர் என்றும் ஈங்குப் பொருள் கொள்ளலாம்" என்று சொல்லி அண்ணாமலையை ஒரு பார்வை பார்த்தார். குறிப்புணர்ந்த அவையில் ஆரவாரமும் கைதட்டலும் நடந்தது. திரு. அண்ணாமலை நாட்டுக்கோட்டை நகரத்தார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

உரிச் சொல் எது? ஏது?

டாக்டர் தி. ப. சாமி, எம்.ஏ.,பி.டி.,
திருப்புவனம்

''பூ—புல்— கல் - மண்'' என்றதும் அப்பொருளை நினைப்போம். அதாவது பூ-என்றதும் மல்லிகை- முல்லை தாமரை போன்ற பூவையே நினைப்போம். ஆனால் 'நின்றான் - சென்றார் - போடு தேடு'' என்றதும் மனிதன் செய்த செயலையே நினைக்கிறோம். எனவே சொற்களில் வேறுபாடு — இனம் வகை—உண்டு. இதை உணர்ந்த முன்னோர், சொற்களை 1) பெயர்ச் சொல், 2) வினைச் சொல், 3) இடைச் சொல் 4) உரிச் சொல் என்று நான்கு வகை கொண்டனர். ஆயினும் தொல்காப்பியர் ''சொல் என்பன பெயர் - வினை என்ற இரண்டு என்பர் அறிஞர்'' என்றும் ''அவ்வகளுடன் இடை, உரி என்ற சொல்வகையும் தோன்றும் என்கிறார்கள்'' என்றும் கூறுகிறார். அதாவது தமிழ்ச் சொல் 1) பெயர் 2) வினை 3) இடை 4) உரி என 4 வகை எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்காமல் 'மற்றவர்கள் தெரிவிக்கிறார்கள்' என்கிறார். இவ்வாறு தொல்காப்பியத்தில் படர்க்கைக் கூற்றாகக் காண்கிற நூற்பாக்கள் - கருத்துக்கள் அனைத்தும் ஆராயப்பட வேண்டும்.[1] அவற்றுள் உரிச் சொல்லைப் பற்றி இப்பொழுது காணலாம்.

உரிச்சொல் என்றால் என்ன? எது? சிவப்பு கம்பலை உவப்பு-வெறுப்பு போன்ற சொற்கள் என்ன வகை என்று எண்ணிப் பார்த்த பின்பு இலக்கணத்தில் உரிச்சொல் என்று கூறிய காரணம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

1) எடுத்த எடுப்பிலேயே சொல்வகை நான்கையும் தொல்காப்பியர் ஒரே தன்மைத்தாக ஏற்கவில்லை என்று மேலே காட்டியுள்ளேன்

---

1 தொல்காப்பிய நூற்பாக்களில் என்ப, மொழிப, என்மனார், புலவர்—என்றெல்லாம் படர்க்கைக் கூற்றாக வருவன அனைத்தும் 1) குற்றமோ 2) குறையோ 3) குன்றக் கூறலோ 4) பிழையோ உடையன. உரிச்சொல் இலக்கணம் குறையுடையது; பிழை எனினும் இழுக்காது.

2) உரிச்சொல் இலக்கணம் விளக்க வேண்டிய உரியியலில் உரிச் சொல் பட்டியல் தருகின்றார் அதாவது உரியியல். இலக்கணமாகாத அகராதியாக அல்லது நிகண்டாக உள்ளது. எது? ஏன்? என்று விளக்கும் பத்தியில் இந்த இயல் நிகண்டு போல் தோன்றும் காரணத்தைக் காணலாம். இங்கு இலக்கணக் குறைபாடுகளைக் காணலாம்.

3) குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றும்.
நெறிப்பட வாராக் குறைச்சொல் கிளவி

உரிச்சொல்என்று எழுத்ததிகாரத்தில் குறிக்கிறார். அதாவது முழுச்-சொல் ஆகாத குறைச்சொல்லே உரிச்சொல் என்கிறார் ஆசிரியர். தேவநேயப் பாவாணர் தன் ஒப்பியல் மொழிநூலில் (பக்கம் 257) இதனை மறுக்கிறார். 'கருப்புப் பூனை' என்றபொழுது 'கருப்பு' என்ற நிறச்சொல் முழுச் சொல்லாக உள்ளது. ஆனால் 'செங்கடல்' செந் தாமரை' என்று சொல்லும்பொழுது 'சிவப்பு நிறம்' புலப்படும். ஆனால் 'செங்-செந்' என்பன முழுமையான சொற்கள் அல்ல; இத்தகைய சொற்களே குறைச்சொல் ஆகும் என்று கொள்ளலாம். அல்லது (2) 'நல்ல-எண்ண' என்று சொன்னதும் ஏதோ இன்னொரு சொல் தேவைபோலத் தோன்றும். இதனால் 'நல்ல—எண்ண' என்பன குறைச்சொல் என்று கொள்ளப்படும். இதனால்தான் விண்ண வெள்ள' போன்ற சொற்களை குறைச்சொல் என்றும், உரிச்சொல் என்றும் நச்சர் போன்ற உரைகாரர்கள் காட்டுகிறார்கள். மேலும் ''விண்—விண்ண'' 'வெள்—வெள்ள'' ''ஒல்—ஒல்ல'' என்று உரைகாரர்களே [1] காட்டுகின்றனர் 'இன்னல்-சிவப்பு-மாதர்' போன்ற முழுச் சொற்கள் உரிச்சொல் என்று சொல்லப்படுவதால் குறைச் சொல்தான் உரிச்சொல் என்பது பொருந்தாது.

---

1 'செய்—செய்ய' போன்றதே வெள்-வெள்ள, எனவே பகு-பதமே ஆகும் எனவே ஒல்-ஒல்ல வெள்ள என்பன பகாப்பதம் ஆகாது (இலக்கணப்படி) உரிச்சொல் அனைத்தும் பகாப்பதம். என்பது சரியானால் ... 3. விண்-விண்ண, ஒல்-ஒல்ல என்ற பகு-பதங்கள் உரிச்சொல் ஆகா. இவை உரிச்சொல் என்றால் பகாப்-பதம் என்ற இலக்கணம் பொய் ... எண்ணுக;

4) பல்வகைப் பண்பும் பகர் பெயராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல் - என்றும், பெயர்-வினை-இடை, உரி நான்கும் பகாப்பதம் - என்றும் நன்னூல் சொல்லும். இங்குள்ள 'பகர் பெயராகி' என்பதைப் பின்னால் காரணம் காட்டி விளக்குவேன். ஏனைய அனைத்தும் பொய் என்பதைக் காணலாம். எப்படி? 1) பல்வகைப் பண்பும் பகர் பெயர்ச்சொல் தான் உரிச்சொல் என்ற விளக்கமே வினோதம்-எப்படி? ஆண்பால் - பெண் பால் என இரண்டு உண்டு ஆண் தான் பெண்பால் என்பது போன்ற விளக்கமே இது. 2) பல்வகை பண்பும் பகர் பெயர் ஆகாத 'உறு-தவ'' போன்ற சொற்கள் நிறைய உண்டு. எனவே பண்புப் பெயரே உரிச்சொல் என்பது ஏலாது 3 ஒரு குணம் பல குணம் -தழுவும் தன்மை, பெயருக்குத்தான் உண்டு, †

4) செய்யுட்கு உரியன உரிச்சொல்—என்பது பொருந்தாது ஏனெனில் அன்பு—அழகு—சிவப்பு போன்ற அன்றாட வழக்குச் சொற்களை உரிச்சொல் என்பதால் செய்யுட்சொல் என்பது பொருந்தாது. மொழி வரலாற்றின்படி செய்யுட்கே உரிய சொல் † எதுவும் கிடையாது.

5) உரிச்சொல் பகாப்பதம் என்பது நன்னூல்; ஆனால் வெளிப்படையான பகுபதங்களே மிகுதி— தொல்காப்பியர் கூறுகின்ற 1) தீர்தல், 2) தீர்த்தல், 3) வார்தல் 4) கூர்ப்பு முதலியன வெளிப்படையான பகுபதங்கள்—எனவே உரிச்சொல் பகாப்பதம் என்பது எப்படி? 5) தாதுச் சொல்லே உரிச்சொல் –என்கிறார்

---

† மனைவி (wife) என்று பொருள் கொண்ட மூன்று சொற்களை வடவர் (ஆரியமொழியில்) ஆண்பால்-பெண்பால்-அலிப்பால் என்பர் தமிழில் கிடையாது.

† ஒன்றின முடித்தல் உத்தியில் இன்னொன்றை இயம்பினால் செய்யுட்கே உரியன அணி — என்ற இலக்கணமும் பொய் ஆதாரம் — இதுவே. (புரியவில்லையா?) ஒப்புமைக் கூட்ட அணி என்பதும் இவ்வாறு ஒன்றினமாக உள்ளவற்றைக் கூட்டிக் கூறுவதே. இங்கு உடம்பொடு புணர்த்தல் உத்தியும் இருப்பதை உணரலாம். எனவே உத்தி வகை இலக்கணயுரைக்கே — என்பதும் பொருந்தாது.

தெய்வச்சிலையார். தாது என்றால் பகுதி ஆகும். உறு, கழி போன்ற ஒரு சில உரிச்சொல்களே தாது ஆகும். அதிர்வு—ஆய்தல்—வார்தல் முதலியன பகுதி ஆகாது. மேலும் தாது என்றால் வேர்ச் சொல் என்பார்கள். இத்தகைய வேர்ச்சொல்லாக 'ஏ' மட்டுமே உள்ளது. வேண்டுமாயின் ஐ போன்ற ஓரிரு சொற்களைக் கொள்ளலாம்.

6) அடிச்சொல்லே உரிச்சொல்—என மொழியியலில் மொழிகின்றார் K சீனிவாசன்—உண்மையைச் சொன்னால் 'தொல்காப்பியம்—நன்னூல் முதலிய தொன்னூல்கள் சொல்வகையாக 'உரிச்சொல்'லைக் கொள்ளுகின்றன. ஆனால் சொல்கின்ற ஒரு சொல் கூட உரிச்சொல் ஆக வழியில்லையே என்(ன) செய்வது? என்ற நிலையில் புதிய விளக்கம் தருகிறார். எப்படி? அளி = அள் + இ. மலர் = மல் + அர் என்று பிரித்து அள், மல், என்பன உரிச்சொல் என்கிறார். இத்தகைய வேர்ப்பகுதியை எந்த இலக்கணமும் இயம்பவில்லை மலர் என்ற பெயர்சொல்லை 'மல் + ஆர்' என்று பிரிக்கலாம் என்ற எண்ணமே நன்னூல் காலத்தில் தோன்றவில்லை. (இத்தகைய வேர்ச்சொல் ஒன்றுகூடத் தொல்காப்பியம் உள்ளிட்ட எந்நூலிலும் இல்லை.)

மொழியில் சொல்வகை எத்தனை எப்படி? ஏன்? ஆதிமனிதன் தான் கண்ட கல்—புல்—மண்—மரம் முதலியவற்றைப் பெயரிட்டுப் பேசினான். இவைகளைப் 'பெயர்சொல்' என்றும் இவற்றையொட்டிச் செயல்படும் சொற்களை 'வினைச்சொல்' என்றும் பின்னர் இலக்கணம் வகுத்தனர். இவ்வாறு ஆதியில் பெயர்—வினை என்ற சொல் வகைகளே தோன்றின. இன்னும் பல காட்டுமிராண்டி மொழிகளில் பெயர், வினை மட்டுமே உள்ளன. நாகரிகம் வளர வளரப் புதுப்புதுப் பொருள்களைப் பார்த்தான் - படைத்தான்—எண்ணினான் இதனால் புதுச் சொற்கள் தேவைப்பட்டன. இவ்வாறு புதிய பொருளாகப் புதிய சொல் தேவைப்பட்ட பொழுது 1) பழைய சொல்லையே ஓசைமாற்றி ஒலித்தனர். 2. இவ்வாறு ஓசை மாற்றுவது தடுமாற்றம் தந்தது. இதனால் சொல்லின் எழுத்தைத் திரித்தனர். 3) பழைய இரண்டு மூன்று சொற்களை ஒன்றாக்கிப் புதுச்சொல் படைத்தனர். இவ்வாறு இணைந்தபொழுது முன்பின் சொற்கள் சிதைந்தன. எப்படி? பூமியில் தோன்றிய உலோகத்தை முதலில் 'பொன்' என்றான். பின்னால் பல நிறத்தில் உலோகம் கிடைத்தபொழுது 1) தங்கத்தை மட்டும் பொன்—என்றனர். 2) தங்கம் ஆகாத

உலோகத்தில் கருப்பு நிறத்தை 'இரும்—பொன்' என்றும், கொஞ்சம் சிவந்ததை 'செம்—பொன்' என்றும் அப்பெயர்சொல் நாளடைவில் 'இரும்பு—செம்பு' என்றும் சிதைந்தன. எப்படியெனில் செம்பொன்—செம்புன்—செம்பு என வழங்குகின்றது. இந்தச் ''செம்பு'' என்ற சொல்லில் 'செம்' புரிகின்றது; 'பு'– புரியவில்லை எனவே இத்தகைய. சொல்லை இலக்கணத்தில் இணைச்சொல் என்று பெயர் வைத்தான இந்தஇணைச்சொல் என்பதே இடைச்சொல் என மருவியது. இவ்வாறு உண்மையில் பெயர்—வினை—இடை என்ற மூன்றே சொல்வகை தோறின. சிலபலன் நியாயத்திலும் அநியாயத்திலும் வேறு பல சொல் வகைகளை இலக்கணக்காரர்கள் கொண்டனர். ஆங்கிலத்தில் பெயரடை, வினையடை போன்ற சொல்வகை கொண்டனர். எனினும்அவையும் ஆதியில் பெயரோ வினையோ ஆகும் என்பதை சிறிது எண்ணினால் புலப்படும். அரபு முதலிய மொழிகளில் பெயர்—வினை—இடை மட்டுமே உள்ளன.

உரிச்சொல் வரலாறு:-

1. தொல்காப்பியம் தோன்றும் முன்பே தமிழில் பெயர்—வினை—இடை என்ற இலக்கணப் பாகுபாடுகள் செய்யப்பட்டு விட்டன இவ்வாறு சொல்வகை செய்த பிறகு சிலர் செய்யுளையும் வழக்கையும் நோக்கும் பொழுது அம்மூவகையிலும் முழுமையாக அடங்காத சொற்களைக் கண்டனர். அத்தகைய சொற்கள் பெயர்—வினை—இடைகளில் அடங்குமா? அடங்காதா? என்று தடுமாறச்செய்யும் நிலையிலும், பொருள் நிலையில் ஒருவகையும், சொல் நிலையில் வேறுவகையும் ஆகக் கூடிய கலப்பட நிலையிலும் காணப்பட்டன. எப்படி? பருப்பு—நெருப்பு புரிகிறது. புலப்படும பெயர்கள்:- ஆனால் நாணம் –என்பது என்ன? எவ்வகைச் சொல்? புரியாமல் ஆதிமனிதன் தவித்தான். இன்னும் சொன்னால் தற்கால மனிதனிடம் நாணம் என்ற உணர்வே இல்லை. பிறகுதான் உண்டானது; அப்பொழுது நாணம்—என்ற பெயர்ச்சொல் உண்டானாலும் அச்சொல் பெயரா? வினையா? என்று புரியாமல் தடுமாறினான் (2) இவ்வாறே சிவப்பு என்ற சொல் நிறத்தைக் குறிக்கும்பொழுது அதனை ஓரளவு உணர்ந்தான் ஆனால் புலவர்கள் கடுங்கோபம் என்ற பொருளில் சிவப்பு என்று சொல்லையே சொன்ன பொழுது பொருளும் புலப்படவில்லை. சொல்வதும் புலப்படவில்லை. (3) தவ, சால என்ற சொற்களைச் சொல்லும்பொழுது 'செய்ய' என்ற வினையெச்சமாக ஒலித்தது; ஆனால் புலவர்கள் 'தவப்பல

சாலப்பலர்' என்றெல்லாம் பெயரடையாகப் பேசினர். இத்தகைய சொற்கள் என்ன வகை' என்று புரியவில்லை. ஆயினும் மொழியில் உள்ளன என்பது மட்டும் உண்மை. இதனால் ''இத்தகைய சொற்களைத் தொகுத்து ஆராயலாம்'' என்று கருதினர். தொகுத்த பட்டியலுக்கு உள்ளசொல் என்றோ எண்ணி மொழியுடன் இருக்கும் உடைமை' என்றோ எண்ணி 'உரிச்சொல்' என்று தலைப்பிட்டனர். இவ்வாறு பெயரிடும் மரபு உண்டு என்பதை செந்தொடை, கொச்சகம், கொச்சக வொருபோகு முதலிய பெயர்களே காட்டும். உரிச்சொல்-என்றால் 'உள்ள சொல்' என்பதே பொருள். சொல்லியல் மேதை தேவநேயப் பாவாணர் உடைமை என்ற சொல்லே உரிமை ஆன-தென்பார் ஆக, முன்னோர்கள் தமக்குத் தெரியாமலும் சொல்வகை புரியாமலும் வழங்கிய சொல்லை — சொற்களை உரியியல் என்று பட்டியல் செய்தனரே தவிர தனிவகை என்று கொள்ளவில்லை என்பதே வரலாறு—மற்றபடி வகை என்றது பிழையே ஆகும்.

2. <u>இலக்கணப் பொருத்தமும் உண்மையும்</u> - 1) சொல்வகை புலப்படாமல் உள்ள சொற்களின் பட்டியலே உரிச்சொல் என்பதால் தான் தொல்காப்பியர் உரிச்சொற்களின் பட்டியல் தருகிறார். 2. மேலே நாணம்-புரியாத சொல் என்றேன். ஆனால் நாம் 'நாணம்' என்பதைப் பண்புப் பெயர் என எளிதாக உணரலாம். ஆயினும் பண்டு ''உள்ள—சொல்'' ஆகிய உரிச்சொல்லில் இடம்பெறும். இதனால்தான் பவணந்தி பல்வகைப் பண்பும் பகர்பெயர் என்றார். எனவே நாணம்-அன்பு-அழகு முதலியன பண்புப்பெயர் என்று தெளி-வாகத் தெரிந்து கொண்ட பிறகு உரிச்சொல் ஆகாது. பண்புப் பெயர் என்பதே முறை, அறிவு. 3. நடந்தான், நடக்கிறான், நட-என்பதை உணர்ந்த முன்னோர்: நடை, நடத்தல், நடப்பு போன்ற வற்றை உணரவில்லை இவைகளை இன்று தொழிற் பெயர், தொழிற் பெயர் வகை என உணரவல்ல நாம் இன்னும் தொல்-காப்பியர் சொன்னார் என்று பயப்பு, கூர்ப்பு, வார்தல் போன்ற-வற்றை உரிச்சொல் என்பது தவறு. சேனாவரையரே (i) பசப்பு என்ற சொல்லைப் பசப்பு ஊருமே என்று வாக்கியப்படுத்தினாலும் (ii) பயப்பு என்பதை பயவாக்களர் என்கிறார். அதாவது 'பய' என்பது பகுதி வினைப்பகுதி, பயவா என்பது செய்யா—வாய்பாடு, வெளிப்-படையாக 'துனிகூர் எவ்வம்' என்று கூறுகின்றார். அதாவது

தொல்காப்பியர் கூறிய கூர்ப்பு என்பது ஈர்ப்பு, படிப்பு, நடிப்பு போன்ற தொழிற்பெயரே தவிர உரிச்சொல் அன்று. 4. கோபம் கொண்ட பொழுது கண்கள் சிவக்கும் கன்னம் சிவக்கும். இதனால் நாளடைவில் சிவப்பு என்ற சொல்லைக் கொண்டு 'கோபம்' என்ற கருத்தை வெளியிட்டனர். இன்னும் உண்மையைச் சொன்னால் 'சிவப்பு-அல்லது சினம்' என்ற சொல் முதலில் நெருப்பு (தீ) என்ற பொருளையே குறித்தது. பின்னால் செம்மைநிறம்? சூரியன், சிவன் அழிவு, நன்மை, தீமை, கோபம் போன்ற பொருள்களைப் பெற்றன என்ற வரலாறு சொற்பிறப்பியலால் நமக்குத் தெரிந்த பிறகு உரிச் சொல் என்பதுகூடாது 5. இவ்வாறுதான் உறு-என்றால் ''பொருந்து, சேர், கூடு'' என்ற பொருள் கொண்ட வினைப்பகுதி ஒரு பொருள் சேராது; சேர்வதாயின், ஒன்றுக்கு மேல் வேண்டும். இதனால் 'உறுபொருள் என்ற தொடர் 'பல பொருள்' என்று எண்ணப்பட்டது நியாயமே இம்நிலையில் 'உறு-பல' என்று பொருள்பட வேண்டும். ஆயினும் 'உறு' என்பது வினைப்பகுதி அல்லவா? வினைப்பகுதி-யான உறு எப்படி 'பல' என்ற பெயர்ப் பொருள் தரலாம் என்று தடுமாறி உரியியல் பட்டியலில் சேர்த்தனர். இவ்வாறு நனி-நளி-கழி - தவ முதலியவற்றைத் தொல்காப்பியக் காலத்தினர் உரியியல் என்று பட்டியல் செய்தது நியாயமே. என்றாலும் இன்று உரிச்சொல் என்பது மிகையே.

முடிவுரை -

1. தொழிற் பெயர் 2. பண்புப் பெயர் 3. கருவிப் பெயர் 4. கருத்தாப் பெயர் 5. வினையெச்சம்-பெயரெச்சம்-குறிப்புப் பெய-ரெச்சம் என்றெல்லாம் சொற்பாகுபாடும் மொழி வரலாறும்-சொற் பிறப்பியல் அறிவும் கொண்டுள்ள நாம், பண்டைய முன்னோர் கொண்டனர் என்றோ சொன்னார் என்றோ இன்னமும் 'விழுமம் உரிச்சொல்' என்றால் அது கருமமே ஆகும். எனவே உரிச்சொல் என்று சொல்வது தேவையற்றதே ஆகும் என்றதும் பலர் வியப் புறலாம். தொல்காப்பியம், நன்னூல் முதலிய தொன்னூல்களில் உரிச்சொல் என்று சொல்லிய எதையும் ஒரு வினாடி எண்ணுங்கள் அந்த உரிச்சொல் 1. பெயரோ 2. வினையோ 3. இடையோ ஆகும் என்பதை உணரலாம். பெயர் என்பது பொருட் பெயரை (காட்சிப் பொருளை) மட்டுமே குறித்தது; இன்று அருவப் பெயரான தொழிற் பெயர், பண்புப் பெயர் முதலிய அனைத்தையும் குறிக்கும் என்று கொள்ளலாம்.

இலக்கியத் திறனாய்வு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி) —ஓர் அறிமுகம்

டாக்டர். வை. சச்சிதானந்தன் M.A. M.Litt., Ph.D.,
மதுரைப் பல்கலைக் கழகம்

புறச்சார்புடைத் திறனாய்வு (extrinsic criticism) இலக்கிய ஆய்விற்குப் பயன்படும் செய்திகளை, ஆராயும் இலக்கிய நூலிற்கு அப்பாற்பட்ட ஆதாரங்களிலிருந்து எடுக்கிறது. நூலாசிரியரின் வாழ்க்கை, அவருடைய சமூக, பொருளாதார சூழ்நிலை, மனநிலை, அவருடைய கொள்கைகள், மதநம்பிக்கை போன்றவைகளுடைய தாக்கத்தினால் அவருடைய நூல்கள் எப்படிப் பாதிக்கப் பட்டன என்ற பிரச்சனைகளுக்குப் புறச்சார்புடைய திறனாய்வு விடை காண முயல்கிறது. அத்தகைய ஆய்வை இன்னும் சற்று விரிவாகச் செய்யும் பொழுது அது புறத்திறனாய்வுத் திரிபு (meta-criticism) ஆகிறது இத்தகைய திறனாய்வு ஒரு ஆசிரியரின் நூல்களின் மூலம் அவருடைய முழு ஆளுடைமை, அவருக்கும் அவருடைய வாசகர்களுக்கும் அல்லது அவருடைய சமூகத்திற்கும் உள்ள தொடர்பு மற்றும் ஒழுக்கம், மதம், உளம் போன்ற களங்களை ஆழ அறிந்து கொள்வதற்கு வழிவகுக்கின்றது. அண்மைக் காலமாக புறச்சார்புடைத் திறனாய்வும், புறத்திறனாய்வுத் திரிபும் ஒன்றையே குறிக்கின்றன என்ற கருத்து நிலவிவந்தாலும், 'புறத்திறனாய்வுத் திரிபு' என்ற சொற்றொடர் தொழில்நுட்பமுடைய கலைச்சொல்லாகப்பயன்படுத்தப் படுகிறது 'புறச்சார்புடைத் திறனாய்வு' ஒரு பாகுபாட்டைக் குறிக்கும்

அகச்சார்புடைத் திறனாய்வு (intrinsic criticism) ஒரு நூலின் புற ஆதாரங்களை ஒதுக்கி அந்நூலின் அமைப்பு முறையில் தீவிர கவனம் செலுத்துகிறது. இக்குறுகலான ஆனால் ஆழமான நோக்கு நூலின் பொருளடக்கத்தில் கவனம் செலுத்தி அதிலிருந்து புற ஆதாரங்களுக்குச் செல்லும் புறச்சார்புடைத் திறனாய்வின் பரந்த நோக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இவ்விரு பாகுபாடுகளையும் இரண்டு மாறுபட்ட திறனாய்வு நோக்குகள் என்றும் கூறலாம்.

திறனாய்வு, விளக்க முறையைச் (interpretative) சார்ந்ததா அல்லது தீர்ப்பு முறையைச் (judicial) சார்ந்ததா, என்ற கேள்வி வெகுகாலமாக விவாதிக்கப்பட்டதொன்று. கொள்கையளவில் அவையிரண்டும் வேறுபட்டிருந்தாலும், செயல்முறையில் கலந்துவிட வாய்ப்புகள் உண்டு திறனாய்வாளனை விளக்கிப் பொருள் கூறுவோன் (interpreter) என்று கொள்வோமானால் அவன் இலக்கியத்-

திற்கும் வாசகர்களுக்கும் இடையில் குறுக்கிட்டு ஒரு ஆசிரியனைப் பற்றியும் அவனுடைய நூல்களைப் பற்றியும் விளக்கிக் கூறுபவன் என்று பொருள்படும். இந்தக் கருத்து கிரேக்க இலக்கிய காலத்திலிருந்தே நிலவிவருகிறது. ஆனாலும் திறனாய்வு என்பது தெரிந்து கொள்வதும் தெரிந்து கொள்ள வைப்பதும் என்ற திட்டவட்டமான கொள்கை ஹெகல் (Hegel) போன்ற தத்துவ ஞானிகளாலும் கார்லைல் (Carlyle) போன்ற அறிஞர்களாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது ஆங்கில நாட்டு மர்ரி (Murry), பிரெஞ்சு நாட்டு கஸாமியன் (Cazamian) அமெரிக்க நாட்டு எட்மண்ட் வில்ஸன் (Edmund Wilson) போன்ற இந்நூற்றாண்டைச் சார்ந்த இலக்கிய அறிஞர்களால் இக்கொள்கை பெரிதும் போற்றப்படுகிறது:

> "ஒரு நூலைத் திறனாய்வு செய்வது என்பது அதை உண்டாக்கிய சக்தியை எவ்வளவு முழுமையாக உணரமுடியுமோ அவ்வளவு முழுமையாக உணர்ந்து, அச்சக்தியை விளக்கம் செய்வதுடன் நிற்காமல், அந்நூல் படிப்படியாக வளர்ந்து ஆசிரியனின் கற்பனையில் உருவெடுத்த விதத்தையும், அதைத்தோற்றுவித்த ஆழ்ந்த உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் அந்நூலின் அடிமட்டத்திலிருந்து வெளிக்கொணர்ந்து அனுபவிப்பதும் ஆகும்."

திறனாய்வாளன் என்பவன் இலக்கியத்தை மதிப்பிடும் நடுவர் என்ற கருத்து ரோமானியர் காலத்திலிருந்தே நிலவிவருவது. ஆனால் உண்மையான தீர்ப்புமுறைத் திறனாய்வின் தலையாய கடமை ஒரு நூலைப்பற்றி தீர்ப்புவழங்குவது அல்ல. இம்முறையில் ஒரு நூலை மதிப்பீடு செய்வதற்கு இலக்கிய அறிவு, நுணுகி ஆராய்தல், ஒப்புமை ஆகிய மூன்றையும் பயன்படுத்தல் வேண்டும், இலக்கிய அறிவும், நுணுகி ஆராய்தலும் எல்லா திறனாய்வாளர்களுக்கும் இருக்கவேண்டிய தகுதிகள். ஆனால் ஒப்புமை ஒருபரந்த நோக்கைத் தன்னுள் அடக்கியுள்ளதால், திறனாய்வாளனுக்குத் தன்னுடைய இலக்கியத்திலுள்ள பழைய நூல்களிலும் புதிய நூல்களிலும் பரிச்சயமிருப்பதுமன்றி, மற்றநாட்டு இலக்கியங்களையும், கலாச்சாரங்களையும் கற்றறிந்திருக்க வேண்டும். சுருக்கமாகக் கூறின், உலகிலுள்ள சிறந்த நூல்களில் தெளிந்த அறிவு இருப்பது அவசியம் தீர்ப்புமுறைத் திறனாய்-

வாளன் (judicial critic) ஒரு பகுத்தறிவாளன் ஆகையால் பகுத்தறிவுதான் அவனுக்கு வழிகாட்டி என்பது சரியானதல்ல. பல மொழி நூல்களைக் கற்றுத்தேர்ந்த அறிஞரும் இந்நூற்றாண்டில் ஆங்கில—அமெரிக்கத் திறனாய்விற்கு வித்திட்டவருமான டி.எஸ் எலியட் (T.S. Eliot) கூறியதுபோல, திறனாய்வு, உணர்ச்சி அறிவின் (sensibility) முதிர்ச்சிநிலையைக் குறிப்பதால், அது விளக்கவும் செய்யும். தீர்ப்பும் கூறும். தீர்ப்பளிப்பதைத் திறனாய்விலிருந்து முற்றிலும் ஒதுக்கிவிட முடியாது. அதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் புகழ்பெற்ற ஆங்கிலத் திறனாய்வாளரான மாத்யூ ஆர்னல்ட் கூறுவதாவது:

''நடுநிலைமையும் தெளிந்த கருத்துக்களும் உடைய ஒருதிறனாய்வாளனின் மனதில் தீர்ப்புக் கூறும் வழக்கம் அவனையறியாமலே உண்டாகி, நாள்தோறும் வளரும் அவனுடைய அறிவுடன் கலந்து, ஒரு இன்றியமையாத குணமாகிவிடுகிறது.''

ஆர்னல்டுடைய கருத்துப்படி ஒரு நூலைப்பற்றி திறனாய்வாளன் தன் சொந்தத் தீர்ப்பைத் தெரிவித்தால் அது பகுத்தறிவின் (common sense) வெளிப்பாடாகும். அவனுடைய தீர்ப்பு அவனுடைய ஆழ்ந்த இலக்கிய அறிவுடன் ஒன்றி அவனை அறியாமலே வெளிப்பட வேண்டும். இக்கூற்றிலுள்ள உண்மையை எளிதில் மறுக்க முடியாது. விளக்கவுரை ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்ட திறனாய்வாளன்கூட தன்னையறியாமலே ஒரு நூலினுடைய சிறப்பைப்பற்றிய தீர்ப்பை வழங்கிவிடுகிறான் இக்கலப்பில், அவனுடைய விளக்கவுரை பரிமளிப்பதற்குக் காரணம் அதில் தீர்ப்பின்மூலம் அவனுடைய ஆளுடைமை அவனை அறியாமலே வெளிப்படுவதுதான்.

ஆர்னல்டைப் போன்ற திறனாய்வாளர்கள் தீர்ப்புத்திறனாய்விலுள்ள ஒரு சிறப்புக் கூறுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். அதாவது, திறனாய்வு என்பது நன்கு எழுதப்பட்ட நூல்களின் அடிப்படையாக விளங்கும் கொள்கைகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்தும் முறைகளை விளக்குவது இக்கருத்தில் நம்பிக்கை வைப்பதின்மூலம் அரிஸ்டாடில் காலத்திலிருந்து இன்றுவரை இலக்கிய அறிஞர்கள் தரமான திறனாய்வை ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

திறனாய்வுக்கலையின் பரந்த பாகுபாடுகளைப் பற்றி அறிந்து கொண்டபிறகு, இப்பொழுது இக்கலை மேலை நாட்டில் எப்படி வளர்ந்தது என்பதைப் பார்ப்போம் ஏதாவது ஒரு தத்துவத்தில் நம்பிக்கை வைக்காத மேலை நாட்டுத் திறனாய்வாளனே இல்லை என்று கூறலாம். இந்தத் தத்துவம் ஒருவனுடைய எழுத்துக்களில் வெளிப்படையாகப் பயன்படுத்தப்படாவிட்டாலும் எங்கேயாவது புதைந்து கிடக்கும். இதன் உட்கருத்து என்னவென்றால் தன்னுணர்ச்சியின் அடிப்படையில் எழுந்தது திறனாய்வல்ல. அதில் கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் இடமிருத்தல் வேண்டும் என்பது. இதன் அடிப்படையில் இலக்கிய நூல்களை ஆய்வு செய்வதை இரண்டாகப் பிரிக்கலாமென்று நினைக்கிறேன். கொள்கைகளின் அடிப்படையில் இலக்கிய அறிவினால் உந்தப்பட்டுச்செய்யும் ஆய்வினைத் திறனாய்வு' என்றும், உணர்ச்சிவசபபட்டுக் கொள்கைகளை மறந்து, எழுத்தாளனுக்குப் பின்னால் மறைந்திருக்கும் மனிதனுக்காகாவோ, அவனைச் சார்ந்த ஒரு குழுவிற்காகவோ அல்லது கும்பலுக்காக அவனைத் துதிபாடுதலையோ அல்லது சொந்த வெறுப்புகளின் அடிப்படையில் அவனை நிந்திப்பதையோ 'விமரிசனம்' என்று கூறலாம் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் வெளிவரும் நாளேடுகளில் நாம் வாரந்தோறும் படிக்கும் பெரும்பாலான மதிப்புரைகள், விமரிசனங்கள் என்றே கொள்ள வேண்டும். இந்நாட்டில் இதுவரையில் இலண்டனிலிருந்து வெளிவரும் 'கால இலக்கியப் பின்சேர்க்கை' அல்லது 'நியூயார்க் கால இதழ்' (New York Times) போன்ற தரமான நடுநிலையான இலக்கிய எடுகள் வெளி வராதது நாம் நூல் மதிப்பீட்டை எந்நிலையில் வைத்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது.

மேலைத் திறனாய்வு வரலாற்றில் எக்காலத்தும் ஏதாவது ஒரு தத்துவத்தையோ அல்லது ஒரு கொள்கையையோ நேர்முகமாகவோ அன்றி மறைமுகமாகவோ இலக்கியக் கலைக்காக பயன்படுத்தாத திறனாய்வாளனே இல்லையெனச் சற்றுமுன் கூறினேன். அரிஸ்டாடிலின் ஆசானான பிளேட்டோவை மேலைநாட்டின் முதல் இலக்கியச் சுவைஞன் என்று கருதுவோமானால் 'உரையாடல்களி'ல் வரும் அவனுடைய கருத்துக்கள் ஒழுக்கத்துறையைச் சார்ந்தவை. முருகியல் கொள்கைகளிலும் அவனுக்கு நம்பிக்கை உண்டு. தருக்கவாத இயலிலும் விஞ்ஞானத்திலும் பற்றுடைய, அரிஸ்டாடிலின் சிறந்த நூலான 'கவிதையியல்' இலக்கியத் திறனாய்விற்கு வித்திட்டதற்குக் காரணம் அவனுடைய வாதவன்மையும், விஞ்ஞான நோக்கும், தீர்ப்பு

வழங்கும் தன்மையுமே ஆகும். ஆயினும் அவன் ஆழ்ந்த மனிதாபிமானம் உடையவன். கிரேக்கக் கவிதை நாடகங்களைக் கூராய்வு (observatioı) மூலம் நுணுகி ஆராய்ந்து கவிதை, மனித இனத்தின் நுண்ணிய கலைகளில் ஒன்று என்று மெய்யெனக் காட்டியதுமல்லாமல் ஒரு நாடகத்தின் பொருளடக்கம், கதைக்கோப்பு, பாத்திர அமைப்பு நடை, மொழிவளம், அதனுடைய கட்டுக்கோப்பு ஆகியவற்றை ஆராய்ந்து நாடகக் கலையைப் பற்றி அவன் கூறிய பல பொதுவான கருத்துக்கள் இன்றும் விவாதிக்கப்படுகின்றன.

அரிஸ்டாடில் காலம் தொட்டு இலக்கியத் திறனாய்வு பலதரப்பட்ட செயல் பண்புகளை உடையதாயிற்று. இவற்றில் சிலவற்றை நாம் ஒதுக்கி விடலாம். சான்றாக, இலக்கியத்திறனாய்வாளர்களாகவும் பணியாற்றும் ட்ரைடன் (Dryden), வேட்ஸ் வொர்த் (Wordsworth), எலியட் போன்ற கவிஞர்களுடைய திறனாய்வு விளக்கம் அவர்களுடைய கவிதைத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டது. சிறந்த கவிதை சிந்தனையையும் உணர்ச்சியையும் ஒன்றாகத் தன்னுள் அடக்கியது என்ற எலியட்டின் கூற்று பொதுவாக அவர் பின்பற்றிய கவிதை வழக்கைக் குறிக்கும். இத்தகைய திறனாய்வு நடைமுறையைச் சார்ந்தது. தத்துவத்திற்கும் அதற்கும் தொடர்பில்லை.

திறனாய்வு பெரும்பாலும் இலக்கியத்தின் கற்பனை நயத்தை ஆதரித்து நிலைநாட்டுவதற்காகவே எழுந்தது எனலாம். பிளேட்டோ தன்னுடைய கற்பனைக்குடியரசிலிருந்து கவிஞனைப் 'பொய்யனிலும் பொய்யன்' என்று குற்றம்சாட்டித் துரத்திய பொழுது, தன்னுடைய குருவிற்கு மறைமுகமாகப் பதிலளிக்கும் முறையில் அரிஸ்டாடில் கவிதை என்பது இயற்கையைப் போலச் செய்வது; ஆகையினால் அது ஒழுக்கத் துறையைச் சார்ந்தது என்று நயம்பட உரைத்தார். அதாவது இயற்கையின் படைப்புகளை கற்பனைக் கண் நோக்கில் அழகிய மறுபிறப்புக்களாக இலக்கியம் உண்டாகிறது என்றார். ஐரோப்பாவின் இடைக்காலத்திலும் மறுமலர்ச்சிக் காலத்திலும் இலக்கியத்தை நல்லொழுக்கக் கொள்கையின (moralists) ரிடமிருந்து திறனாய்வாளர்கள் காப்பாற்றும்படியாயிற்று. மதகுருக்களின் ஆதிக்கத்தில் கற்பனைத் திறனுடைய இலக்கியக் கலைஞர்கள் சாத்தானின் சீடர்களாகக் கருதப்பட்டார்கள்.

அரிஸ்டாடிலுக்கும் அவரைப்பின்பற்றிய மறுமலர்ச்சிக்காலத்துத் திறனாய்வாளர்களுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. 'கவிதை-யியலைப் படைத்த கிரேக்க அறிஞர் பல பொதுக்கொள்கைகளை எடுத்துக் கூறினாலும் அவைகளையே உண்மைகளாகப் போற்ற வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. ஆனால் அவருடைய சீடர்-களோ எழுத்தாளர்களுக்கு எழுதும் முறைகளை வரையறுத்து, வாசகர்கள் நூல்களை எப்படிச் சுவைக்க வேண்டும் என்று சட்டமியற்றி-னார்கள். மறுமலர்ச்சி இத்தாலிய நாட்டைச் சேர்ந்த ஸ்கேலியஜர் (Scaliger) என்ற அறிஞன் "நாங்கள்தான் ஒரு கவிஞனைப் படைக்கிறோம்" என்று பறைசாற்றினான். அவனுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ரோமாபுரியில் வாழ்ந்த திறனாவாய்ளனும் கவிஞனுமான ஹோரஸ் 'கவிதைக் கலை' என்று தான் இலத்தீனில் எழுதிய கவிதையில் சில கொள்கைகளை வரையறுத்தாலும், கவிதையின் நோக்குப் பயனளித்தலா (utilitarian) அல்லது மகிழ்வித்தலா என்ற ஆழ்ந்த பிரச்சனையை எழுப்பி அதை இன்றுவரை விவாதிக்க வைத்து விட்டான். வரையறுத்தல் முறை (prescriptive criticism) யை இன்றும் மார்க்ஸியத் திறனாய்வாளர்களிடமும், ஃப்ராய்டைப் பின்பற்றும் உளவியல் திறனாய்வாளர்களிடமும் காணலாம். முன்ன-வர்கள் வர்க்கப் போராட்டத்தையும் பின்னவர் பாலினத்தையும் அளவுகோலாகப் பயன்படுத்தி இலக்கியத்தை மதிப்பீடு செய்கின்றனர். பொதுவுடைமை நாடுகளில் மக்கள் இன்னின்ன நூல்களைத் தான் படிக்கலாம் என்று அரசாங்கமே ஒரு பட்டியலை அடிக்கடி வெளியிடு-கிறது.

(தொடரும்)

சிலப்பதிகாரத்தில் *இறுக்கம்

ஓர் ஒப்புமை ஆய்வு:

திருமதி பூங்கோதை, M.A
ஆராய்ச்சி மாணவி

தலைசிறந்த கலைப் படைப்புக்கள் அனைத்திலும் இருப்பது போல, சிலப்பதிகாரத்திலும், ஆசிரியர் கூறுகின்ற கருத்திற்கும், அவரது படைப்பிலிருந்து நாம் பெறுகின்ற கருத்திற்கும் இடையே ஓர் இறுக்கம் காணப்படுகிறது; இது கதை அளவிலும் கதாபாத்திர அளவிலும் இருக்கிறது. சிலப்பதிகாரத்தின் கதை, விதியின் வலிமையால் உண்டாகும் துன்பவியல் கதையாகும். அது சாதாரண மனிதனான கோவலனையும் மாமன்னனான நெடுஞ்செழியனையும். மற்றும் மதுரை மாநகரையும் உள்ளடக்கிச் செல்கிறது நமக்குக் கிடைத்த சிலப்பதிகார அச்சுப் பதிப்பிற்கும் வாசகர்களால் நூலிலிருந்து அறிந்து கொள்ளப்படும் கருத்துக்கும் இடையே ஒரு மிகப் பெரிய வேறுபாடு உள்ளது இளங்கோவால் கூறப்படும் கருத்து, சிலப்பதிகாரத்தில் இருந்து அறியப்படும் கருத்தினின்றும் வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக,

> ''வினைகடைக் காட்ட வியங்கொண்டான்''

என்றும்,

> ''யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினை வந்துருத்த தாகலின்''

என்றும்,

> ''காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
> கோவலன் பண்டை ஊழ்வினை யுருத்தென்''

என்றும்,

பல இடங்களில், மாறுபட்ட சூழ்நிலைகளில் உண்டாகும் துன்பத்திற்கெல்லாம் ஊழ்வினை அல்லது விதியே காரணம் என்று பன்முறை கூறுகிறார் இளங்கோ. இருப்பினும் ஆழ்ந்து படிக்கும் எவரும் அவர் கதையை நடாத்திச் செல்வதில் உள்ள நுண்மையை எளிதில் கண்டு கொள்வர். கோவலனின் கொலைக்கு அவன் மாதவியின் மேல் கொண்ட மையலே காரணம் என்றும், மன்னவன் நெடுஞ்செழியனின் முடிவுக்கு அவன் ஆராய்ந்தறியாமல் அளித்த தீர்ப்பே காரணம் என்றும் எளிதிற் கண்டு கொள்ளலாம்

---

* ஆங்கில நாடகத் திறனாய்வில் 'Tension' என்று பயிலப்படும் சொல்லுக்குரிய தமிழாக்கம்.

மனிதன் தோன்றிய காலம் முதலே விதியைப் பற்றிய கருத்து தொடர்ந்து இருந்து வருகிறது. விதியைப் பற்றி ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி விளக்குவதாவது:

> "சில தத்துவார்த்த அல்லது பொதுவான நம்பிக்கைகளின்படி, ஏதோ ஓர் சக்தி அல்லது நெறி எல்லா நிகழ்ச்சிகளையும் அல்லது குறிப்பாக சில நிகழ்ச்சிகளையும் நிலையான தன்மையினின்றும் மாறுதல் காணவியலாதபடி நிர்ணயிக்கின்றது இதற்குப் பெயரே விதி."

கிரேக்கக் காவியப் புலவரான ஹோமர் கூறுவதாவது:

> சில தீங்குகள் கடவுளரின் விருப்பப்படி நடந்தாலும் பெரும்பான்மையான தீமைகள் மனிதனுடைய மதியீனத்தினாலேயே வருகின்றன. சில வகையான தீங்குகளை எவ்வித நன்னடத்தையோ அல்லது எந்தவிதமான அறிவார்ந்த செயலோ தடுத்துவிட முடியாது. இன்னும் சிலவற்றிற்கு மனிதனின் தவறுகளே காரணமாகின்றன.

ஆனால் அவரது படைப்பான இலியட் என்ற காவியத்தில் அவருடைய விதிபற்றிய கொள்கை அவ்வளவு திடமானதாக இல்லை. மேலும் அது மாற்றங்களையும் அனுமதிக்கிறது. பெட்ரோகிள்ஸ் (Petrocles) மட்டும் அக்கிலஸின் (Achilles) எச்சரிக்கையைப் பொருட்படுத்திருந்தால், அவ்வாறு தனது கொடிய சாவைத் தழுவியிருக்கமாட்டான். அக்கிலஸிக்கும் வேறுவிதமான விதி அமைந்திருக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது — அதாவது, ட்ராய் (Troy) நகரத்தில் இறந்து இறவாப் புகழ் அல்லது புகழற்ற நிலையில் வீட்டில் வயோதிகம். ஹோமரின் படைப்பிலே கடவுளரின் பங்கும் மனிதர்களின் பங்கும் ஆக இரண்டும் சேர்ந்து கதையின் போக்கை நிர்ணயம் செய்கின்றன. ஒவ்வொரு ஆபத்திலும் கடவுளரின் குறுக்கீடு உள்ளது. மனிதருக்குச் சமமான பங்கு கடவுள்களுக்கும் இருக்கிறது ஆகவே வெளிப்புறச் சக்திகளும், வெளித்தூண்டுதல் இல்லாத மனிதனின் செயல்களும் இணைந்து இங்கு விதியாகின்றது. கிரேக்க துன்பவியல் நாடகங்களில் மனிதன் மரபுரிமையாகப் பெற்ற சாபத்தின் பலியாகச் சித்திரிக்கப்படுகின்றான். மேலும் சில திகைக்கத்தக்க, கண்ணுக்குத் தெரியாத சக்திகள் அவனது அழிவை நிச்சயம் செய்கின்றன. எஸ்கைலஸின் (Aeschylus) படைப்புகளில் விதியைப் போன்று தோற்றமளிக்கும் ஒரு புதிய சக்தி நாடக

மேடையில் தோன்றுகிறது அது நெமிஸிஸ் (Nemesis) என்னும் நீதி தேவதையுடன் ஒப்பிடப்படுகின்றது. அவருடைய விதிபற்றிய கொள்கையானது அவர்தம் படைப்பான ஒரெஸ்டியா (Oresteia) சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

எட்ரியஸ் (Atreus), தியெஸ்டஸ் (Thyestes) இடையே ஏற்பட்ட சண்டையிலிருந்து அந்தக் குடும்பமே தவறு செய்கிறது. எட்ரியஸ் ஒரு பயங்கரமான கொலையாளிதான். ஆனால் அதுவே எகிஸ்தஸ் (Agisthus) அகமம்னனை (Agamemnon)க் கொன்றது சரிதான் என்று நிரூபிப்பதற்குப் போதுமானதன்று அதுபோலவே அகமம்னனின் பாவங்கள் அவன் கிளிடமெஸ்ட்ரா (Clytemestra) வால் கொல்லப்பட்டதை நியாயப்படுத்த முடியாது. பாரிஸ் (Paris), ஹெலன் (Helen) செய்த பாவங்களால் (Troy) அழிக்கப்பட்டது நியாயம் தான் என்று கூறவும் முடியாது. எல்லாக் கொலையாளிகளும் தாங்கள் தகுந்த தண்டனை கொடுக்கும் பொருட்டுத்தான் கொன்றதாக வாதிடுகிறார்கள். ஆனால் கொலை செய்வது என்பது தனிநபரிடமிருந்து தப்பித் தொடர்ச்சியாக நடைபெறுவது என்ற ஒன்றாகி விட்டது. இது தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொலை செய்வது என்ற ஒன்றிலிருந்து ஒரு சாபக்கேடாக வளரும் வரை நீடித்திருந்தது. இரத்தக் கறை படிந்த ஒவ்வொரு திருத்தமும் அடுத்த ஒரு திருத்தத்திற்கு வழிகாட்டுகிறது. கிளிடமெஸ்ட்ரா அகமம்னனின் சவத்தின் மீதினின்றுதான் தான் களங்கப் பட்டிருப்பதாகவும் ஆனால் தன் இல்லம் சுத்தமாகி விட்டது என்றும் பதிலிறுக்கிறாள். மேற்கொண்டு எந்தவிதமான தீங்கும் செய்யப் படத் தேவையில்லை. ஆனால் ஒரெஸ்டஸும் (Orestes) கிளிடமெஸ்ட்ராவைக் கொன்றுவிட்டு இதே வாதத்தை எழுப்புகிறான். இரண்டு பேருமே தவறாக வாதிக்கிறார்கள். இங்குத் தொடர்ச்சியான கொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் படுகிறது. கடவுளரின் குறுக்கீட்டிற்கும் மனிதரின் உறுதியற்ற மனப்பாங்கிற்கும் இடையே ஒரு சமரசம் உண்டாகிறது. இறுதியாக கடவுளரின் குறுக்கிட்டினால் ஒரெஸ்டஸ் சீற்றங்களினின்றும் (Furies) காப்பாற்றப்படுகிறான்.

ஷேக்ஸ்பியரின் விதி பற்றிய கொள்கை பெரிதும் வேறுபட்டது. அவர் தனது ஆரம்பகாலத் துன்பவியல் நாடகங்களில் விதி வெல்ல முடியாதது என்ற கொள்கையைக் கடைப் பிடித்தார். மேலும் அவர் தனது விதிக்கு மனிதன் எவ்விதத்திலும் பொறுப்பாளியல்ல என்றும் கூறுகிறார். ரோமியோ அண்ட் ஜூலியட் என்ற நாடகம் இதற்கு மிகச் சிறந்த சான்றாகும். சந்தர்ப்பங்களே ஒன்று மறியாத இளம் காதலர்களைத் துன்பக்கடலில் ஆழ்த்துகின்றன. ஆனால் அவருடைய பிற்காலத்திய, மிகவும் புகழ்பெற்ற துன்பவியல் நாடகங்கள் விதி பற்றிய அவரது மாறுபட்ட கொள்கையினை விளக்குகின்றன. இவற்றில் மனிதனின் நடத்தையே அவன் தலைவிதியை நிர்ணயிக்கின்றது. எதையும் ஒத்திவைக்கும் பழக்கம் ஹாம்லெட்டையும் (Hamlet), பேராசை மாக்பெத்தையும் (Macbeth), ஆராய்ந்து பாராமல் விரைந்து செயலாற்றும் குணம் ஒதெல்லோவையும் (Othello), ஆய்ந்து பார்த்து முடிவெடுக்கும் திறனில்லாமை அரசன் லீயரையும் (Lear) துன்பத்தில் மூழ்கடிக்கின்றன. அதே நாடகங்களில் ஒஃபீலியா (Ophelia), டெஸ்டிமோனா (Desdemona), கார்டீலியா (Cordelia) போன்ற சில அப்பாவி கதாபாத்திரங்கள் ஒரு குற்றமும் செய்யாதபோதும் துன்புறுகின்றன.

> 'விளையாட்டுச் சிறுவர்கள் கையில் உள்ள வண்ணத்துப்
> பூச்சிகள் போல் நாம் கடவுளருக்குத் தோற்றம்
> அளிக்கிறோம். அவர்களது விளையாட்டுக்காகக்
> கொல்லப்படுவது நாம்தான்.''

என்ற ஷேக்ஸ்பியரின் தத்துவத்தை அக்கதாபாத்திரங்கள் விளக்குமுகத்தான் அமைந்துள்ளன. ஹோமருடன் ஒப்பிடும்பொழுது, ஷேக்ஸ்பியரின் தவிர்க்க முடியாத விதியைக் காட்டிலும் தனிமனிதனின் நடத்தையின்மேல் அதிக நம்பிக்கை வைத்திருப்பது தெரிகிறது. மனிதர்கள் எப்போதும் தங்கள் பாதையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். லியர், மாக்பெத் போன்றோரின் தவறான விருப்பமே அவர்களின் சாவுமணியாய் அமைகிறது.

இந்துமதக் கோட்பாட்டின்படி, மனிதனின் செயலைக் காட்டிலும் அவன் விதியை நிர்ணயிப்பது வேறெதுவுமில்லை.

மதம் மற்றும் அறிவியல் சம்பந்தமான கலைக் களஞ்சியம் (Encyclopaedia of Religion and Ethics) கூறுவதாவது :

> ஊழ்வினைபற்றிய கொள்கை (doctrine of Karma) இந்துமதத்தின் எல்லா சாராரும் ஒப்புக் கொள்ளக் கூடிய உறுதியான நம்பிக்கைகளுள் ஒன்று. மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்ற ஒரு நம்பிக்கை சாதாரண மக்களின் நன்னடத்தைக் கொள்கைகளில் பாராட்டத்தக்கதொன்றாகும்.

முற்பிறப்பில் செய்த செயல்களின் விளைவே மனிதன் இப்பிறப்பில் அனுபவிப்பது ஆகும். இது ஒரு வகையில் 'நடத்தையே தலைவிதியை நிர்ணயிக்கிறது' (character is destiny) என்ற ஷேக்ஸ்பியரின் கூற்றை ஒத்திருக்கிறது.

இளங்கோ அடிகள் இதையே தன் காப்பியத்தில் பிரதிபலிக்கிறார். இருநிலைகளில் நாம் பொருள் கொள்ளலாம். அதாவது, மேலோட்டமாகப் பார்க்கையில், 'விதி வெல்ல முடியாதது; அது மனிதனின் வாழ்க்கையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கிறது' என்றும், சற்று ஊன்றிப் பார்க்கையில், மனிதன் சுதந்திரமாக எதையும் செய்ய வல்லவன் அவனே தன் எதிர்காலத்தை முடிவு செய்கிறான் என்றும் இரண்டு கட்டங்களில் பொருள் கொள்ளலாம். அச்சுப்பதிப்பிற்கும் (text) கருத்துப் பதிப்பிற்கும் (sub-text) இடையிலுள்ள இவ்விடைவெளி எளிதில் அகற்றப்படலாம். உண்மையில் இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அன்று.

சிலப்பதிகாரத்தின் கதை பின்வருமாறு : மாநாய்கன் மகளாகிய கண்ணகியும், மாசாத்துவன் மகனாகிய கோவலனும் இல்லறம் பூண்டு இனிமையாய்ச் சில காலம் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்து வருகின்றனர். பின் கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியெனும் ஆடலழகியுடன் வசிக்கிறான். அவளுடன் நல்லறமாக இல்லறத்தை நடத்தி மணிமேகலை எனும் மகவைப் பெறுகிறான். இந்திரவிழாக் காலத்தில் ஒரு நாள் இருவரும் கடற்கரையிலிருந்து கானல்வரி பாடுகையில், மாதவியின் தூய்மையில் யாதொரு காரணமுமின்றிச் சந்தேகம் கொண்டு கோவலன் அவளைப் பிரிகிறான். முன்னோர் ஈட்டிய பெருஞ்செல்வத்தையெல்லாம் கெட்டுப் போக்கிய-

தற்காகக் கவலைப்பட்டவாறே கண்ணகியிடம் திரும்புகிறான். எஞ்சிய அவளது காற்சிலம்புகளைக் கொண்டு இழந்த செல்வத்தை மீண்டும் ஈட்டக் கருதி மதுரைக்குப் புறப்படுகிறான் கண்ணகியும் மறுமொழி-யேதுமின்றி அவனைப் பின்தொடர்கிறாள் மதுரையில் காற்சிலம்பை விற்கும் பொருட்டு அரண்மனைப் பொற்கொல்லனை அணுகுகிறான் கோவலன். ஆனால் விளைந்ததோ விபரீதம். பேராசை கொண்ட பொற்கொல்லனின் சதியும், ஆராய்ந்து பாராமல் சொன்ன அரசனின் தீர்ப்பும் அநியாயமாக அவனுயிரைப் பலி கொள்கின்றன. கணவன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி கொற்றவனின் அரண்மனை சென்று கோவலன் குற்றமற்றவன் என நிரூபிக்கிறாள். உண்மை-யுணர்ந்த பாண்டிய மன்னன் 'யானே கள்வன்' எனக் கூறி வீழ்ந்து மடிகிறான் பாண்டிமாதேவியும் அவனைப் பின்பற்றி உயிர் விடுகி-றாள். ஆனால் கண்ணகியோ இன்னமும் சீற்றம் தணியாமல், மதுரையையே தீக்கிரையாக்குகிறாள். இவ்வாறாகச் சிலப்பதிகாரம், ஒரு சாதாரண மனிதன், ஓர் அரசன், ஒரு நகரம் ஆகியவை சம்பந்தப்பட்ட ஒரு துன்பியல் கதையாகும்.

நடந்த நிகழ்ச்சிகளுக்கு விதியே முக்கிய காரணம் என இளங்கோவடிகள் தெளிவாக எடுத்துக் கூறும் மூன்று முக்கிய நிகழ்ச்சி-கள் சிலப்பதிகாரத்தில் உள்ளன. இவை: முதலாவதாகக், கோவலன் மாதவியைத் தவறாகப் புரிந்து கொண்டு அவளை விட்டு விலகுதல்; இரண்டாவதாகக், கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்-படுதல்; மூன்றாவதாகப், பாண்டியன் ஆராயாமல் கொலைத் தண்டனை வழங்குதல் மாதவியுடன் இனிமையாக இல்லறம் நடத்தி வரும் கோவலன் அவளைத் திடீரென ஒரு பாடலை வைத்துச் சந்தேகிக்க எள்ளளவும் இடமில்லை. ஆனால் கோவலன் சந்தேகப்-படுகிறான் மதுரைக்குப் போகும் விஷயத்திலும் அவன் விரைந்து ஆராயாமல் முடிவெடுக்கிறான். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான முடிவைச் சிறிதும் சிந்திக்காமல் எடுத்து விடுகிறான். மாதவியின் மனையிலிருந்து திரும்பியவுடனே யாதொரு சிந்தனையுமின்றி, உடன் மதுரைக்குப் போக முடிவெடுக்கிறான் உடனே தன் மனைவியுடன் அந்த நள்ளிரவில் புறப்பட்டும் விடுகிறான். பின்னால் அதை நினைந்து மிகவும் வருந்துகிறான். இம்முடிவு ஊழ்வினை உறுத்து வந்தூட்டியதால் உண்டான முடிவு என்று அடிகள் கூறுகிறார். மன்னன் நெடுஞ்செழியன் இவ்வளவு கவனக்குறைவாகவோ, அவசரப்பட்டோ எந்த முடிவையும் இதற்கு முன்னர் எடுத்ததே

இல்லை நீதிநெறி வழுவாத, நேர்மையான மன்னன் என்று மக்க-ளிடம் புகழ் பெற்றவன். ஆனால் ஊடல் கொண்டிருக்கும் கோப்-பெருந்தேவியைச் சமாதானப்படுத்த விரையும் வேகத்தில் ஒரிரு மணித்துளியில் வேறுவிதமாக நடந்து கொண்டு விட்டான் ஆகவே இம்மூன்று இடங்களிலும் அவர்கள் தாங்களாகவே நடந்து கொள்ள-வில்லை. அவர்கள் செயல்கள் அவர்கள் விருப்பத்தினின்று எழுந்தவை அல்ல. ஏதோ ஒரு சக்தி அவர்களை இவ்வாறு செயல்படும்படி, வெளியிலிருந்து தூண்டியிருக்கிறது.

ஆனால் ஆழ்ந்து படிப்போமனால், கோவலன் மாதவியின் பேரழகின்மேல் கொண்ட மையலே அவன் அழிவிற்கு ஆரம்ப காரணம் என்று அறியலாம். பண்டைய வழக்கப்படி, மாதவியுடன் உறவு கொண்டிருந்தபோதிலும் கோவலன் கண்ணகியோடு தொடர்பு கொண்டிருந்தால், அவனுக்கு இந்நிலை ஏற்பட்டிருக்காது அவனுக்கு ஏற்பட்ட துன்பத்திற்குக் காரணம் அவனது அவசர குணமும், ஆழமற்ற சிந்தனையும், கவனமில்லாமையும்தான். அவன் மட்டும் அவ்விரு கட்டங்களிலும் சிறிது சிந்தித்திருப்பானேயானால், அவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டான். அந்த இரு நிகழ்ச்சிகளும் அதாவது மதுரைக்குச் சென்ற பின்பும் நடக்கவிருந்த துன்பத்தைத் தவிர்த்தி-ருக்கலாம். தன் மனைவியின் காற்சிலம்பை விற்பதற்கு அவன் ஒரு வணிகனை நாடியிருக்கலாம். பிறப்பால் அவனே ஒரு வணிகன் அவனிடம் உள்ளதோ இரண்டே இரண்டு காற்சிலம்புகள். முன்பின் அறியாத ஓர் அந்நிய நாட்டில் எப்படி வியாபாரத்தைத் துவக்குவது என்பதைச் சிந்தித்துப் பின் செயலாற்றியிருக்க வேண்டும் சந்திக்க வேண்டிய வணிகனைப் பற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வழியில் கண்டவனையே அணுகியிருக்கக் கூடாது. இச் சிந்தனையற்ற செயலே அவன் அகோர முடிவுக்கு அடிகோலுகிறது. அரசனைப் பொறுத்தமட்டில் அவனுடைய உணர்ச்சிகளே அவனது விதியை நிர்ணயிக்கின்றன. அரசன் என்ற முறையில் எல்லா வழக்குகளையும் அவன் நீதிமன்றத்தில்தான் விசாரித்திருக்க வேண்டும். மேலும் திருட்டு பற்றிய புகார் கிடைத்தால், திருடனைப் பிடித்து வரத்தான் உத்தரவிட்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு கணம்கூடச் சிந்தியாமல் கொலைத் தண்டனை விதித்து விடுகிறான். ஊடலுற்றிருக்கும் மனைவியைப்பற்றி எவ்வளவுதான் ஆர்வமாய் இருந்தாலும் அவன் தன் அவாவினை அளவிற்கு மீறி, அறிவையும் அடக்குமளவு செல்லவிட்டிருக்கக் கூடாது. இதைப் பொறுத்த அளவில் அவன்

ஒரு கணவனின் இடத்திலிருந்து அரசனின் கடமையைச் செய்கிறான். சூழ்நிலை எவ்வாறாக இருந்தாலும் சரி, மன்னவன் தவறிழைப்பதை நீதிநூல்கள் அனுமதிப்பதில்லை. அரசன் ஆற்றவேண்டிய கடமையினின்றும் அவன் முற்றும் தவறிவிடுகிறான். அரசனின் மரணம் அவனது செயலுக்கு கிடைத்த தக்க தண்டனையேயன்றி அங்கு விதி-பற்றிய பேச்சுக்கே இடமில்லை.

கோவலன் செய்த பாவங்களின் சம்பளமே அவன் கடைசிக் காலத்தில் அனுபவித்தது என்று கோவலனின் விதி பற்றி விவரிப்-பாரும் உளர். ஆனால் நெடுஞ்செழியனின் மரணம், மதுரையின் அழிவு முதலியவற்றிற்கும் விதிக்கும் உள்ள தொடர்பு போதுமான அளவு விவரிக்கப்படவில்லை. அரசனின் முடிவு கோவலனின் விதியோடு சம்பந்தப்படுத்தப்படுகிறது இளங்கோ மன்னவன் மரணத்தை,

'காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை யுருத்தென்''

என்று கூறுகிறார். கோவலனின் ஊழ்வினையே பாண்டியனைத் தவறிழைக்கச் செய்து அவனை வீழ்த்தியது என்று கூறப்படுகிறது. மதுரையின் அழிவைப்பற்றிக் கூறுங்கால், மதுரை நகருக்கு ஒரு சாபம் உண்டென்றும் அதனால்தான் அது அழிந்தது என்றும் கூறுமுகத்தான்

''உரைசால் மதுரையொடு அரைசுகே டுறுமெனும்
உரையுமுண்டே நிரைதொடி யோயே''

என்று கூறுகிறார் இவ்விளக்கங்களை மதுராபதித் தெய்வம் கண்ணகி-யிடம் சொல்வதுபோல் கட்டுரை காதையில் அமைக்கப் பட்டுள்ளது. அச்சுப் பதிப்பில் இதுதவிர மேற்கொண்டு எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

கதையின் அடிப்படையிலேயே விதி உள்ளது. ஆகவே விதி கதைப் போக்கைத் தீர்மானிக்கக் கூடிய, தவிர்க்க முடியாத முக்கியமானதோர் அம்சமாகும். இளங்கோவின் சிலப்பதிகாரமும், ஹோமரின் இலியட்டும் ஒரு விதத்தில் ஒன்றுபட்டிருக்கின்றன சிலப்பதிகாரத்தின் கதையும் கோவலனின் முற்பிறப்பில் இருந்து தொடங்குகிறது; இலியட்டின் கதையும் தங்க ஆப்பிளுக்காகத் தேவதைகள் சண்டையிட்டுப் பாரிஸை நாடியதிலிருந்து தொடங்குகிறது ஹோமரின் படைப்பிலே உள்ளவாறுபோல, இளங்கோவின் படைப்-பிலும் வெளிப்புறச் சக்திகளும் வெளித்தூண்டுதலில்லாத மனிதனின்

செயல்களும் இணைந்து செயலாற்றுகின்றன. கதைப்போக்கின்படி விளைவுகளுக்கு வெளிப்புறச் சக்திகளே காரணமாகின்றன; ஆனால் படித்தறிந்து பெறும் கருத்தின்படி, மனிதனின் செயல்களே காரணமாகின்றன. இவ்விரண்டிற்குமிடையே உள்ள முரண்பாடுகள் எளிதில் அகற்றப் படலாம். விதியின்முன் மனிதன் சக்தியற்றவன் என்பது அக்காலத்தில் மிகவும் ஆழ்ந்து பரவியிருந்த நம்பிக்கைகளுள் ஒன்று இதையே இளங்கோவும் தனது நூலில் பிரதிபலிக்கிறார். ஆகவே மேலோட்டமான நிலையில் விதியே வாழ்வில் ஏற்படும் துன்பத்திற்கு முழுக்காரணம் என்று கூறுகிறார். ஆனால் கலைஞர் இளங்கோ தனது காலத்தின் நம்பிக்கைகளை எல்லாம் தவிர்த்து ஒரு தொலை நோக்குப் பார்வையுடன மற்றவரைக் காட்டிலும் தனித்து நிற்கிறார். ஆராய்ந்து படித்து அறியும் கருத்துப் பதிப்பு, கோவலன மாதவியின் மேல் கொண்ட மையலும், காற்சிலம்பை விற்கத் தவறான நபரை அணுகியதும் தான கோவலனின் மரணத்திற்குக் காரணம் என்று தெரிவிக்கிறது. மேலும் அரசனின் அவசரமுடிவே அவனது சாவிற்குக் காரணம் என்றும் புலப்படுத்துகிறது. இளங்கோ தம் காலத்தையும் கடந்து நோக்கக் கூடிய சிறந்த கலைஞராக விளங்குகிறார். அதில் ஒரு மாற்றமும் தெரிகிறது. அதாவது விதி புறத்திலிருந்து செயற்பட்ட நிலையிலிருந்து இப்பொழுது மனிதனின் செயல்மூலம் உள்ளேயும் செயலாற்றுகிறது. இளங்கோ கலைஞர் என்ற முறையில் தனது கருத்தை அவரது படைப்பில் வலியுறுத்துகிறார். எனவேதான் சிலப்பதிகாரக் கதையோட்டததில் ஒரு நுண்மை தென்படுகிறது. இளங்கோ பழங்கொள்கையை மறுக்கவில்லை; அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு மேலே செல்லுகிறார்.

‘ வினையாற்றும் சக்தி மனிதனிடத்தே உண்டு: கொடுக்கப்பட்ட அனைத்துச் சீட்டுக்களுடன் அவன் எவ்வாறு விளையாடுகிறான். என்பதே வினை ’ என்று கூறுகிறார் டாக்டர் இராதாகிருஷ்ணன் இவர்தம் கருதது இளங்கோவின் கருத்தை ஒத்திருப்பதுபோல் உள்ளது ஒருவகையில் இளங்கோவின் ஊழ்வினைபற்றிய கருத்து ‘‘நடத்தையே மனிதனின் தலைவிதியை நிர்ணயிக்கிறது’’ என்ற ஷேக்ஸ்பியரின் கருத்துக்கு இணையானது என்று கூறலாம்; இது மட்டுமின்றி ஹோமரின் கருத்துக்கும் இணையானதெனலாம். செய்த கருமத்திற்குத் தக்கவாறு தண்டனை தருவதற்கு விதியைப் பயன்படுத்துவதில் இளங்கோ எஸ்கைலசுக்கு இணையாக விளங்குகிறார். தொகுத்துக் கூறுங்கால், சிலப்பதிகாரத்தின் இறுக்கம் பாடலின் பெருமையை உயர்த்தி, அதன் காப்பியத்தன்மையைச் சிறப்புறச் செய்கிறது.

குழந்தைகளின் நோய் தடுப்பு முறைகள்

டாக்டர். எஸ்.எம்., ஜெயதிலகம் M.B.B.S.,D.C.H

குழந்தை மருத்துவ நிபுணர், ஈரோடு

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமான குழந்தைகள் அன்புடன் சிரித்து விளையாடும் போது, பெற்றோர்களும் மகிழ்ச்சி அடைகின்றனர் குழந்தைகள் வாடி மெலிந்து, நோயினால் நலிந்து சோர்வுடன் காணும்போது பெற்றோர்கள் பலமடங்கு வருத்தம் கொள்கின்றனர். இது பாசத்தின் விளைவு என்று கூற வேண்டியதில்லை

குழந்தைகளுக்கு வரும் சில நோய்களை நீக்குவதற்கு மருந்துகள் கிடையாது. உதாரணமாக வைரஸ் (Virus) என்னும் மிக நுண்ணிய கிருமிகளால் உண்டாகும் பெரிய அம்மை, மணல்வாரி (Measles), பொன்னுக்கு வீங்கி (Mumps), இளம்பிள்ளைவாதம் (Polio), மூளைக்காய்ச்சல் (Viral Encephalitis) போன்ற வியாதிகளை வராமல் தடுக்க முடியும். ஆனால் நோய் வந்தால் மருந்து கொடுத்து நோயினை உடனே குணப்படுத்த முடியாது.

குழந்தைக்கு வரும் தொண்டை அடைப்பான் (Diphtheria—டிப்தீரியா), கக்குவான் (Whooping cough) போன்ற வியாதிகளை உடனடியாகச் சோதனை செய்து விரைவில். கண்டுபிடித்துக் குணப்படுத்த வேண்டும். இல்லையெனில் உயிர்க்கு ஆபத்து உண்டாகும். இவ்வியாதிகளை எல்லாம் எளிதாகத் தடுப்பு ஊசிகள் மூலம் வராமல் செய்ய முடியும்.

இனி சில வியாதிகளையும் அவைகளை எப்படித் தடுப்பு ஊசி மூலம் வராமல் இருக்கச் செய்ய முடியும் என்பதையும் ஈண்டு ஆராய்வோம்.

போலியோ என்னும் இளம்பிள்ளை வியாதி :

இது ஒரு வைரஸ் எனப்படும் நுண் கிருமியால் உண்டாகின்றது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுத் தலைவர் பேராசிரியர் டாக்டர் இராமலிங்க சுவாமிகள், போலியோ வியாதி இந்தியாவில் ஒரு லட்சம் குழந்தைகளில் 5 முதல் 10 குழந்தைகளுக்கு உள்ளன என்றும்,

ஒவ்வொரு ஆண்டும் 60,000 குழந்தைகள் இவ்வியாதியால் ஊன மடைகின்றனர் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். போலியோ வியாதி கிராமங்களைவிட மக்கள் நெருங்கி வாழ்கின்ற தடுப்புச் சக்தி குறைவான நகரங்களில் அதிகமாகத் தென்படுகின்றன. பொதுவாக இளம்பிள்ளைவாதம் 3 ஆண்டுக்குக் குறைவான குழந்தைகளுக்கு அதிகமாக வருகின்றது. குழந்தை பிறந்த முதல் ஆண்டுக்குள் இன்னும் தீவிரமாக வருகின்றது. எட்டு ஆண்டைத் தாண்டிய குழந்தைகளுக்கு இது வருவது மிக மிகக் குறைவு

இளம்பிள்ளை வாதம் தொண்டைச் சளி (Droplet Infection), மலம் ஆகியவற்றின் (Faecal Contamination) மூலம் பரவுகின்றது. நமது உணவுக் குடலில் போலியோ நுண் கிருமிகள் பெருக்க மடைந்து (Multiplication) குருதிக் குழல்கள் (Blood Vessels) மூலமாக நரம்பு மண்டலத்தை அவை தாக்குகின்றன. பொதுவாக இந்த நுண் கிருமிகள் தண்டு வடத்தின் (Spinal Cord) முன் கொம்பு செல்களை (Anterior Horn Cells) யும் முகுளத்தை (Medulla) யும் தாக்கி அழிக்கின்றனர்.

இவ்வியாதியினை 4 பருவங்களாகப் (Stages) பிரிக்கலாம். ஏதேனும் ஒரு பருவத்தில் (Stage) இவ்வியாதி நின்றுவிடக் கூடும். முதல் பருவம் (Silent Stage) அல்லது இரண்டாம் பருவம் (Abortive Stage) பலியாகாத பருவம்; மூன்றாம் பருவம் பக்கவாதம் வராத பருவம் (Non Paralytic Stage); நான்காவது பருவம் பக்க வாதப் பருவம் (Paralytic Stage). பொதுவாகத் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்குச் சளி, இருமல், காய்ச்சல் ஆகியன தோன்றும். இது வெறும் சளிக் காய்ச்சல் என்று தாய்மார்கள் நினைத்து விட்டுவிடுவர். திடீரென குழந்தை காலை இழுத்து இழுத்துத் தவழும்போது தாய்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுக் குழந்தை மருத்துவரை (Child Specialist) அணுகுவர். அவரோ வேறு வழியின்றி "குழந்தைக்குப் போலியோ என்னும் இளம்பிள்ளைவாதம் உள்ளது; சில நாட்கள் கைகால்களை அசைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்; பரவுகின்ற வைரஸ் கிருமிகள் ஒரு இடத்தில் நிலைத்து (Settle) இருக்க வரட்டும். என்று கூறி தாய்மார்களைச் சமாதானப்படுத்துவர். இவ் வைரஸ் கிருமிகள் நரம்பு மண்டலத்தைத் தாக்குவதால் எந்த நரம்பு பாதிக்கப்படுகின்றதோ அதற்குச் சம்பந்தப்பட்ட தசைகளின் வலிமை

(Tone) குறைந்து விடுகின்றது. இதனை ஆங்கிலத்தில் (Hypotonia) என்று கூறுவர். போலியோ வியாதி ஒரு சிறு தசையையோ, தசைக் கூட்டங்களையோ (Groups of muscles) அல்லது ஒருகாலை யோ அல்லது இருகால்களையோ அல்லது கைகளையும் கால்களை-யுமோ கூடத் தாக்கலாம். சில சமயம் மூளையினைத் தாக்கி (Polio Encephalco Myelitis) மூச்சு மண்டலத்தைத் நெருக்கி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடும். பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு செயற்கை மூச்சுக் கருவிகளைப் பொருத்தி வைக்க வேண்டும் (Artificial Heart Lung Machine). உயிர் தப்புவது கடவுளின் அருள் தான். இந்நிலையில் மனித முயற்சியால் ஒன்றும் செய்ய இயலாது.

ஆனால் இக்கடுமையானதும் கொடுமையானதுமான வியாதி-யைத் தடுப்பு ஊசி மூலமாகவோ அல்லது சொட்டு மருந்து மூலமா-கவோ தடுக்க முடியும். இதற்கான தடுப்பூசியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ''சால்க்'' என்ற அமெரிக்க நாட்டு அறிஞர். ஆனால் இந்தத் தடுப்பு மருந்து ஊசி வடிவத்தில் இருப்பதால் சால்க் எனப்-பெயரிய (SALK) அத்தடுப்பு ஊசி அவ்வளவாகப் பிரபல மடைய-வில்லை. டாக்டர் சால்க் இருமுறை இந்தியாவிற்கு வந்துள்ளார். ஒரு முறை நேரு பெருமகனார் பரிசு பெறவும், மறுமுறை தான் கண்டுபிடித்த சால்க் தடுப்பு ஊசியினை (Salk vaccine) பிரபல-மடையச் செய்யவும் வந்தார். நம்நாட்டுக்கு உகந்தது சால்க் தடுப்பு ஊசி என்பது அவர் எண்ணம். இந்தத் தடுப்பு ஊசி கொல்லப்பட்ட வைரஸ் கிருமிகளால் ஆனது. ஒரு முறை போட்டால் போதும். மற்றொரு தடுப்பு மருந்து இப்பொழுது வழக்கத்தில் இருந்து வரும் சேபின் (SABIN) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட வீரியம் குறைந்த (Attenuated) உயிரோடு உள்ள (Live) வைரஸ் கிருமிகளைக் கொண்ட மருந்தாகும். இது சொட்டு (Drops) வடிவத்திலும் பனி உருண்டை (ice candy) வடிவத்திலும் கிடைக்கின்றது. நம் நாட்டிற்கு பெல்ஜியத்திலிருந்தும் மாஸ்கோவிலும் இருந்து இந்த சேபின் மருந்து (Sabin vaccine) வருகின்றது. இந்த மருந்தைத் தகுந்த குளிர் நிலையில் வைக்க வேண்டும். இதனைக் குளிர்ப் பெட்டி-யில் (Fridge) 24 மணி நேரமும் மின்விசை நிறுத்தாமல் பார்த்துக்-கொள்ள வேண்டும்

உறைநிலை		காலஅளவு (சொட்டு)		பனி உருண்டை
அறைவெப்பநிலை	—	14 நாள்	—	7 நாள்
+ 4 டிகிரி-c	—	6 மாதம்	—	3 மாதம்
— 20 டிகிரி-c	—	2 ஆண்டுகள்	—	1 ஆண்டு

இப்போலியோ மருந்தின் காலவரையறை தாண்டிவிட்டால், மருந்தில் சக்தி இருக்காது. இந்த அட்டவணை மிக முக்கியமானது. இதன்படி போலியோ மருந்தை வைக்க வேண்டும் அப்படியில்லை யாயின் போலியோ தடுப்பு மருந்து வெறும் தண்ணீருக்குத்தான்(Coloured water) சமம் பேராசிரியர் சந்தான கோபால கிருட்டிணன் ''போலியோ தடுப்பு ஊசி மருந்துக் கண்ணாடிக் குடுவை (vias)யில் உள்ள இரப்பர் அடைப்பானை மூன்று முறைதான் (Thawing) குத்தி மருந்தை எடுக்க வேண்டும். அதற்கேற்பக் குழந்தைகளை அருகில் அழைத்து வைத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில், அதாவது அடிக்கடி இரப்பர் அடைப்பானைக் குத்தி மருந்தை எடுத்தால் (frequent Thawing) மருந்தின் சக்தி குறையும்'' என்று கூறுகின்றார். குழந்தைகளுக்குக் காய்ச்சல் இருக்கும்போதும் சளி இருக்கும் போதும், வயிற்றுப் போக்கு இருக்கும்போதும் போலியோ தடுப்பு மருந்து தரக்கூடாது. போலியோ பெறுகின்ற குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து தருவதற்கு அரை மணி முன்பும் அரை மணி பின்பும் பால் தரக்கூடாது. வெறும் வயிற்றோடு இருப்பது நல்லது. இந்தச் சேபின் தடுப்பு மருந்தை பேராசிரியர் ஜான்(Professor A.T. John) கீழ்க்கண்டவாறு கொடுப்பது நலம் என்று கூறுகின்றார்.

''முதல் ஆண்டு, மாதம் 1 முறை வீதம் 6 தடவையும் பிறகு ஆண்டுக்கு 1 முறை வீதம் 4 ஆண்டுகள் தரவேண்டும் இதுதான் சரியானமுறை. சாதாரணமாக மூன்று முறை கொடுக்கும் பழக்கம் உள்ளது. இப்படி மூன்று முறை தடுப்பு மருந்து பெற்ற குழந்தைகளுக்குக்-கூட போலியோ வியாதி வந்து விடுவதால் மேற்கண்ட முறையே சரியானது என்பது அவர் கருத்து எனது அனுபவத்திலும் இது சரியென்றேபடுகின்றது பெரிய குழந்தைகளுக்குப் பனிக் கட்டி உருண்டை வடிவத்தில் இம்மருந்து கிடைக்கின்றது.

நம் நாட்டில் பொதுச் சுகாதாரம் மிகவும் குறைவு. போலியோ கிருமிகள் மலத்தில் வருவதால் ஈக்கள் மூலம் இவை பரவுகின்றன.

ஆகவே கூடுமானவரை வெளியில், தெருக்களில் குழந்தைகளை மலம் கழிக்க விடக்கூடாது. ஈ மொய்த்த பண்டத்தை வாங்காமல் இருத்தல் நலம். குழந்தைகள் உண்ணும் பாலில் ஈ மொய்க்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இளம்பிள்ளை வாதம் வந்தவுடன் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(1) ஓய்வு — போலியோ வியாதியின் கடுமையைக் குறைக்க கண்டிப்பாக ஓய்வு (Bed rest) தேவை

(2) வலி, பிடிப்பு முதலியன குறைக்க மருத்துவர் கொடுக்கும் ஆஸ்பிரின் போன்ற மருந்து தரலாம் வெப்ப ஒத்தடம் (Hot application) 15 நிமிடங்கள் நாள் ஒன்றுக்கு 5 அல்லது 6 தடவை தரலாம், பிலிப்ஸ் கம்பெனி தயாரிக்கும் கீழ்ச்சிவப்பு ஒளி விளக்கு (Infra red-lamp) உபயோகப் படுத்தலாம்.

(3) மூத்திரம் தங்கு தடையின்றிச் செல்ல நீர், நீர் உணவு தரலாம் யூரோ கோலின் (Uro choline) போன்ற மருந்து தரலாம்.

(4) மலச்சிக்கல் இருந்தால் அதனைத் தவிர்க்க பரஃபின் (Liquid Paraffin), எனிமா பயன்படுத்திக்கொள்ளலாம்.

(5) படுக்கை கடினமாக இருக்க வேண்டும். (Firm Bed) பாதம் காலில் இருந்து 90° இருக்குமாறு வைக்க வேண்டும். முழங்காலைச் சிறிது மடக்கி வைக்கலாம். இடுப்பு நேராகவும், தோள்பட்டை 90° தள்ளி இருக்க வேண்டும்.

(6) நீர் தாராளமாக உட்கொள்ளலாம். வெய்யில் காலத்தில் சிறிது உப்பு அதிகமாக எடுத்துக் கொள்ளலாம்.

(7) முக்கியமாக மூச்சு சரியாக இருக்கின்றதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். தொண்டையில் சளி கட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உதரவிதானம், மார்பு தசைகள் போன்றவைகள் தாக்கப்பட்டு இயங்கும் சக்தி இழந்து விட்டால் மூச்சு உதவிக் கருவியில் (Respirator) குழந்தைகளை வைக்க வேண்டும்.

முக்கியமாக இளம் பிள்ளை வியாதி வந்தவுடன் முதல் இரண்டு வாரங்கள் அதிக அசைவின்றி இருத்தல் நலம். ஏனெனில் வைரஸ் நுண்கிருமிகள் பரவுவது நிறுத்தி, குறித்த இடத்தை அடைய (settle) இரண்டு வாரம் பிடிக்கும். பிறகுதான் சரியாகச் சோதனை செய்து பாதிக்கப் பட்ட கால்களுக்குப் பயிற்சி அளிக்க (Physio therapy) ஆரம்பிக்க வேண்டும். மருத்துவர் சொல்லும் அறிவுரைப்படி நடக்க வேண்டும்.

இறுதியாக போலியோ அதிகம் உள்ள மாதங்களில் காது, மூக்கு குத்தவோ தடுப்பூசியோ போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட கடுமையான வியாதியினைக் குறைந்த செலவில் வராமல் தடுப்பதன் மூலம், நமது குழந்தைச் செல்வங்களுக்கு ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்கலாம்.

"நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

பைந்தமிழ் வளர்த்த தேவர்

கலைமாமணி கவிஞர் க. அ. ஆறுமுகனார்

உலகெலாம் போற்றி நின்ற
ஒளிமிகும் தமிழணங்கின்
கலை எழில் இடைக்காலத்திற்
கலைந்திட அதனை முன்போல்
நிலை பெறச் செய்வதற்கே
நெடிதாய பணி மேற்கொண்ட
தஜலமகன் இவனே! என்று
தமிழகம் சாற்றும் அம்மா!

சுமை சுமையாகும் ஓலைச்
சுவடியின் வடிவில் நின்று
கமழ் தமிழ்க் காவியங்கள்
கருத்துடன் அச்சிலிட்டே
தமிழருக் களித்த சான்றோன்!
தவநெறிக் கலைமாச் செல்வன்!
சமயமெய்ச் சைவம் கொண்டோன்!
தமிழ்க்கடல் ஆழம் கண்டோன்!

பார் புகழ்ந்தேத்தும் சேது
பதியவர் மரபிற் போந்து
சீர்பெறும் வாழ்வு வாழ்ந்தோன்
திருமிகும் செம்பி நாடான்!
கார்நிகர் கொடையான்! கற்ற
கலைஞரைப் போற்றிக் காக்கும்
ஆர்வமும் அன்பும் கொண்டோன்!
அருந்தமிழ்ப் பாவல் லோனே!

தன்னிக ரில்லான்! பொன்னுச்
சாமிமால் தவத்தால் வந்த
மன்னவன்! ஈதலே தன்
மாண்புறு பணியாய்க் கொண்டோன்!
தென்னவன் செங்கோல் கண்ட
செந்தமிழ் மதுரை மூதூர்
தன்னிலே மீண்டும் நான்காம்
தமிழ்ச்சங்கம் தழைக்கச் செய்தோன்!

பாலவ நத்தம் என்னும்
பழம்பெரும் பதியில் நற்செங்
கோலொடு வாழ்ந்து நின்ற
குறுநில மன்னன்! சான்றோன்!
கோலமார் தமிழ்நீருண்ட
குளிர் முகிலனையான்! காக்கும்
மாலவன்! புகழைப் போற்றி
வாழ்த்துவர் நாட்டுமக்கள்!

தாயினை யொத்த சங்கத்
தமிழுக்கே உலகில் வாழ்ந்தோன்!
ஆயநற்கலைகள் கற்றோன்!
அமரவாழ்வினிற் றுலங்கி
மாயிருள் ஞாலத்திற் கோர்
மலைவிளக் கென்றே நின்ற
தூயநற் குணத்தான்! பாண்டித்
துரைபுகழ் வாழிவாழி!

செந்தமிழ்க் கல்லூரி ஆண்டு விழா

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும் செந்தமிழ்க் கல்லூரியின் ஆண்டு விழாவும், கல்லூரிப் பேரவையின் நிறைவு விழாவும் 24—3-82 புதன்கிழமை மாலை கல்லூரியில் நடைபெற்றது மதுரை மண்டலக் கல்வித் துணை இயக்குநர் திரு. கமலக் கண்ணன் அவர்கள் தலைமை ஏற்றார்கள். அதுபோழ்து, மதுரைப் பல்கலைக்கழக தமிழ் இணைப் பேராசிரியர் டாக்டர் ந செயராமன் அவர்கள் இலக்கியச் சொற்பொழிவு ஆற்றினார்கள். ஆட்சிக்குழு உறுப்பினர்களும் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்புற அமைந்திருந்தது.

காஞ்சி முனிவரின் அருளுரை

தமிழ்ச் சங்கச் செயலர் திரு. டி பி. எம். பெரியசாமி
வரவேற்புரை அளித்தல்

தமிழ்ச் சங்கத்தில் வரவேற்பு

வள்ளுவராண்டு 2013 - மாசித்திங்கள் 28-ஆம் நாள் மாலை (12—3—82) 6 மணி. தமிழ்ச் சங்கக் கட்டிடம் விழாக் கோலம் பூண்டிருந்தது, கொடிச்சீலையும், தோரணமும், வாழையும், கமுகும் வாயிலை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அர ஹர முழக்கத்துடன் தொண்டர் குழாம் புடை சூழ, காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீஜயேந்திர சரசுவதி சுவாமிகள் தமிழ்ச் சங்கத்துக்கு எழுந்தருளினர். பூர்ண கும்பத்துடன், இந்துமத ஆச்சார மந்திர உச்சாடனத்துடன், தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. டி. பி. எம். பெரியசாமி, கல்லூரிச் செயலாளர் மா. தனுக்கோடி பாண்டியன், கல்லூரிக் குழுத் தலைவர் மா. சங்கரபாண்டியன், மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர்களான பாலையம்பட்டி அரசர் K. S. D ராசேந்திரன், கே.கந்தசாமி வே.இ. பரசுராம், ஆ. ஆண்டியப்பத் தேவர், திரு. தேவராசன், மதுரைக் கல்லூரிச் செயலர் திரு. முத்துசாமி, N. S. சுந்தரவரதன், டாக்டர் சேதுராமன், கல்லூரி முதல்வர் ஆர். வி. நாராயணன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

மேடைக்கு வருதற்கு முன், காஞ்சி முனிவர் தமிழ்ச் சங்கத்தைச் சுற்றிப் பார்த்ததோடு, அதன் வளர்ச்சி குறித்தும் மிகுந்த அக்கரை-யோடு விசாரித்தார்கள். சங்கச் செயலாளர் அவர்கள் வரவேற்பு மடல் வாசித்து அளித்தார்கள். ஆசியுரை நல்கிய காஞ்சி முனிவர், தமிழ்ச் சங்கம் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவர் பற்றி நினைவு கூர்ந்தார்கள். தேசீயம், தெய்வீகம் ஆகிய இரண்டிற்கும் இணைப்புப் பாலமாக இருந்தவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்று குறிப்பிட்டு. தமிழ்ச்சங்கம் சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபடவேண்டும் என்றும் கூறினார்கள். வாய்ச்சொல் அருளியதோடு அமையாது, தமிழ்ச்சங்கச் சார்பில் சைவ சித்தாந்த வகுப்புகள் தொடங்குதற் பொருட்டு, பத்தாயிரம் வெண்பொற் காசுகளையும் ரூ.10,000 மனமுவந்து அளித்த கொடைத்திறம் பலராலும் பாராட்டப்பட்டது.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SENTAMIL

1.	Place of Publication	...	Madurai
2.	Periodicity of Publication	...	Quarterly
3.	Printers Name	...	S. Singaram
4.	Nationality	...	Indian
5.	Address	...	44-B, Vengatapathy Iyengar St. Madurai - 625 009
6.	Publisher's Name	...	T. P. M. Periyaswamy
7.	Nationality	...	Indian
8.	Address	...	Madurai Tamil Sangam, 54, Tamil Sangam Road, Madurai-1.
9.	Editor's Name	...	T. P. M. Periyaswamy
10.	Nationality	...	Indian
11.	Address	...	Madurai Tamil Sangam, 54, Tamil Sangam Road, Madurai-1.
12.	Names and addresses of individuals who won the newspaper and partners or share holder's holding more than one percent of the total capital	...	Madurai Tamil Sangam, 54, Tamil Sangam Road. Madurai-625 001

I, T. P. M. Periaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

T. P M, Periyaswamy,
Signature of Publisher.

Dated :

Maniam Press, Madurai-9